Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 263

ஞாயிற்றுக்கிழமை
17 ஒகஸ்ட் 2025

ஆவணி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

## மடுமாதா திருவிழாவில் கைதான கள்வர்கள்!

மன்னார், ஓக. 17
மன்னார் மடுத்திருத்தலத்தில் கள்வர்களின் நடமாட்டம் இம்முறையும் அதிகளவில் இருந்ததாகவும், பல்வேறு திருட்டுக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 15

இலங்கையில்

# 27 வீதமான குடும்பங்களுக்கு கடும் உணவுப் பற்றாக்குறை!

ஐ.நா. சிறப்பு அறிக்கை

**கொழும்பு, ஓகஸ்ட் 17**

**பொருளாதார நெருக்கடி காரணமாக, இலங்கையில் 27 வீதமான குடும்பங்கள் கடுமையான உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளன என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.** 15

## மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

மஹிந்த அமரவீர வலியுறுத்து



கொழும்பு, ஓக. 17
மாகாணசபைத் தேர்தலை அரசாங்கம் உடனடியாக நடத்தவேண்டும். இந்த விடயத்தில் மாற்றுக் கருத்துகளுக்கு இடமிருக்கக்கூடாது என்று முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர வலியுறுத்தியுள்ளார். 15

## பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை; முடக்குவதற்கு அரசு வியூகம்

கொழும்பு, ஓக. 17
பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஹருண ஜயசேகரவுக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நிராகரிக்கப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது. இந்தப் பிரேரணையின் மூலம் ஏற்படக் கூடிய சட்டச் 15



யாழ்ப்பாணம் சர்வதேச

## புத்தகத் திருவிழா இறுதி நாள் இன்று



யாழ்ப்பாணம், ஓக. 17
உதயனின் ஊடக அனுசரணையில், யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்று வரும் 'யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகத் 15

## ஜனாதிபதி அநுரகுமார இந்தியாவின் கைக்கூலி!

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 17
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவின் கைக்கூலியாக மாறியுள்ளார் என்று, முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர சாடியுள்ளார். இலங்கையின் அண்மைக்கால

## சொத்துக் குவிப்பு வழக்குகளில் முன்னாள் எம்.பிக்கள் சிக்குவர்!

தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பு

கொழும்பு, ஓக. 17
முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் பலர், வருமானத்தை விடவும் அதிகமான சொத்துகள் சேர்த்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.
பண ஏய்ப்புக் குற்றச்சாட்டின் கீழ் முன்னாள் அமைச்சர்கள் தொடர்பில் சில மாதங்களாக 15

## ஹர்த்தாலுக்கு ஆதரவில்லை!

*வவுனியா வர்த்தகர் சங்கம் அறிவிப்பு*

வவுனியா, ஓக.17
இலங்கைத் தமிழரசுக்கட்சியால் நாளை திங்கட்கிழமை அழைப்பு விடுக்கப்பட்டுள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கமுடியாதென வவுனியா வர்த்தகர் சங்கத்தின் நிர்வாகசபை 15

## புங்குடுதீவுப் படுகொலை ஒருவரிடம் விசாரணை!

யாழ்ப்பாணம், ஓக. 17
யாழ்ப்பாணம் புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த தனியார் பேருந்து உரிமையாளரான ஐயாத்துரை அற்புதராசா (அகிலன்) என்பவர் கடந்த வாரம் வெட்டிக் கொல்லப்பட்ட நிலையில், இது தொடர்பில் ஒருவரிடம் விசாரணைகள் இடம்பெற்றுள்ளன என்று தெரிய வருகின்றது.
படுகொலைக்கு நீதிகோரி நேற்றுமுன்தினம் 15

## நல்லூரில் வெடிகுண்டு: புரளியால் நேற்றுப் பதற்றம்

விரிவு பக்கம்:- 11

அரசியற் பேதங்களைக் கடந்து

## சமஷ்டியை வென்றெடுப்பதற்காக ஒன்றிணையவேண்டும் தமிழர்கள்

சிறிதுங்க ஜயசூரிய கருத்து

கொழும்பு, ஓக. 17
சமஷ்டி கட்டமைப்பிலான அரசியல் தீர்வை வென்றெடுப்பதற்காக வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் அரசியற் பேதங்களுக்கு அப்பாற்பட்டு கூட்டாகப் போராட வேண்டிய காலம் வந்துவிட்டது. அதற்கு மக்கள் தயாராக வேண்டும் இவ்வாறு ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார். சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் 'உதயனுக்கு' வழங்கிய குறுகிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு கூறினார். 15

### முச்சந்தி முரளி

**'கள்ளநோக்கத்தோட ஹர்த்தால் வைச்சால் இப்பிடி எல்லாப் பக்கமும் எதிர்ப்பு வரத்தானே செய்யும்'**

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிகம் |
| --- | --- | --- | --- | --- | --- |
| கொவிசெத | 16.08.2025 | 4165 | O | 19 28 33 48 | விசேட எழுத்து: O |
| ஹந்தஹஹண ராசி சுப பலன் | 16.08.2025 | 1232 | | 02 27 35 62 | வெற்றி இலக்கினம்: விருச்சிகம் |
| NLB ஜய | 16.08.2025 | 0191 | Q | 7 2 4 1 | |
| மெகா பவர் | 16.08.2025 | 2271 | M | 06 15 16 80 | சுப்பர் இலக்கம்: 22 |
| மஹஜன சம்பத | 16.08.2025 | 5923 | R | 8 7 6 4 0 6 | |
| தன நிதானய | 16.08.2025 | 1953 | H | 04 55 56 81 | விசேட எழுத்து: H |
| அத சம்பத | 16.08.2025 | 0498 | R | 6 4 0 6 | |
| சுப தவசக் | 16.08.2025 | 0039 | | 11 22 42 43 | வெற்றி இலக்கினம்: சிம்மம் |

# மாகாணசபை முறைமைக்கு இப்போது எதிர்ப்பு இல்லை

லக்ஸ்மன் நிபுணாராச்சி எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.17**

**மாகாணசபை முறைமையை நாம் அன்று எதிர்த்தபோதும், இப்போது ஆதரிக்கிறோம். அதற்கான தேர்தலை விரைவில் நடத்துவோம். எல்லை நிர்ணய வேலை முடிந்ததும் தேர்தல் நடக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் நிபுணாராச்சி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று எங்களுக்கு யாரும் அழுத்தம் தரவில்லை. எதிர்க்கட்சிகளுக்கு இதை உடனடியாக நடத்துவதற்கு விருப்பமில்லை. அவர்கள் தோல்வி பயத்தில் உள்ளார்கள். எல்லை நிர்ணய விடயம் முடிந்ததும் மாகாணசபைத் தேர்தலை நடத்துவோம். தேர்தலை நடத்துவதற்கு எமக்குப் பயமில்லை. எல்லை நிர்ணய விடயத்தை விரைவில் முடிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம்.

மாகாணசபை முறைமை எமது அரசமைப்புக்குள் உள்ளது. அதை நாங்கள் நீக்கமுடியாது. அப்படியே நடத்திச்செல்வோம். அதை நீக்குவோம் என்று நாம் தேர்தல் வாக்குறுதி கொடுக்கவில்லை. நாம் எதிர்க்கட்சியில் இருக்கும்போது அதிகமான விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தோம். திறந்த பொருளாதாரத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தோம். அதற்குக் காரணம் அதன்மூலம் கிடைக்கப்போகும் பிரதிகூலம் தான். அப்படித்தான் இந்த மாகாணசபை முறைமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்தோம்.

ஆனால் ஆட்சி நடத்துகின்றபோது இருக்கின்றநிலைமையை சமாளித்துக்கொண்டு செல்ல வேண்டும் -என்றார். (எ-75)

| சுபிரி தன சம்பத | | |
| --- | --- | --- |
| திகதி: 16.08.2025 | தினம்: சனிக்கிழமை | வெற்றி வாரம்: 0631 |
| ஆங்கில எழுத்து: E | வெற்றி இலக்கம்: 1 4 7 1 1 4 | |

| Super Ball | | | |
| --- | --- | --- | --- |
| திகதி: 16.08.2025 | தினம்: சனிக்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம்: 2897 | ஆங்கில எழுத்து: E | வெற்றி இலக்கம்: 15 31 69 74 | |

| சனிதா | | | |
| --- | --- | --- | --- |
| திகதி: 16.08.2025 | தினம்: சனிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து: Z | வெற்றி இலக்கம்: 06 26 48 76 | வெற்றி வாரம்: 5058 | |

| SASIRI | | |
| --- | --- | --- |
| திகதி: 16.08.2025 | தினம்: சனிக்கிழமை | |
| வெற்றி வாரம்: 0749 | வெற்றி இலக்கம்: 05 26 38 | |

| லக்ன ராசி | | |
| --- | --- | --- |
| திகதி: 16.08.2025 | தினம்: சனிக்கிழமை | |
| தனுசு | வெற்றி இலக்கம்: 01 07 40 54 | சீட்டிழுப்பு வாரம்: 4609 |

| KAPRUKA | | | |
| --- | --- | --- | --- |
| திகதி: 16.08.2025 | தினம்: சனிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து: R | சுப்பர் இலக்கம்: 23 | வெற்றி இலக்கம்: 05 28 41 53 | வெற்றி வாரம்: 2073 |

| அத கோடிபதி | | |
| --- | --- | --- |
| திகதி: 16.08.2025 | தினம்: சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து: Y | வெற்றி இலக்கம்: 18 20 55 69 | வெற்றி வாரம்: 2723 |

## நீரில் மூழ்கி சிறுவன் சாவு

கொழும்பு, ஓக.17

மதுரங்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரபுர கெமுன ஏரியில் 12 வயதுச் சிறுவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கரிகட்டியப் பகுதியைச் சேர்ந்த சிறுவன் குளத்தில் குளித்துக்கொண்டிருந்தபோதே இந்த சம்பவம் நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## பெரும்போகத்துக்கான விதைநெல் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக.17

திருநெல்வேலியிலுள்ள யாழ்.மாவட்ட விதை நெல் உற்பத்திக் கூட்டுறவுச்சங்கம் பெரும்போக நெற்செய்கைக்கான விதைநெல் வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

சிக்கன மற்றும் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்தில் அத்தாட்சிப்படுத்திய தரமான முளைதிறன் கொண்ட விதைநெல்லை செய்கையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

பிஜி 406, ஏ.ரி 362 இன விதைநெல்லே இவ்வாறு வழங்கப்பட்டுவருவதாக மாவட்ட விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-25, 17)

## நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம் பரிந்துரையை சமர்ப்பிக்கலாம்

கொழும்பு, ஓக.17

2024ஆம் ஆண்டு 9ஆம் இலக்க நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தொடர்பான அவதானிப்புகள், கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்கள் உட்பட பொதுமக்களிடம் நீதி அமைச்சுக் கோரியுள்ளது. வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்டம் மற்றும் திருத்தங்களை மறுஆய்வு செய்ய அமைச்சரவை குழுவொன்றை நியமித்துள்ளது. இறுதிப் பரிந்துரைகளைச் செய்வதற்கு முன், பொதுமக்களிடம் ஆலோசனை பெறுவது இந்தக் குழுவின் பணியாகும். நேற்றுமுன்தினம் முதல் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கமுடியும். பங்களிப்புகளை மேல் இடது மூலையில் "2024ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான குழு" என்று குறிப்பிடப்பட்ட உறையில் செயலாளர், நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சகம், எண். 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்குத் தபால்மூலம் அனுப்பமுடியும். "2024ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான குழு" என்ற தலைப்பில் legal@moj.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் சமர்ப்பிப்புகளைச்செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# வேலைவாய்ப்புகளில் இனிமேல் அரசியல்வாதிகளின் தலையீடு இல்லை!

அமைச்சர் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.17

வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு எவரும் அரசியல்வாதிகளின் பின்னால் போகத் தேவையில்லை. அவர்களின் கடிதங்கள் தேவையில்லை என்று அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாங்கள் மிகவும் நேர்த்தியாக இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிவருகிறோம். இனி வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு எவரும் அரசியல்வாதிகளின் பின்னால் போகத் தேவையில்லை. அவர்களின் கடிதங்கள் தேவையில்லை. பெண் பிள்ளைகள் தொழில் பெறுவதற்காக அரசியல்வாதிகளின் ஓய்வு விடுதிக்குச் சென்ற காலம் இருந்தது. இனி அப்படிப் போகத் தேவையில்லை.

நாமல் ராஜபக்சவே கூறி இருந்தார் அரசியல்வாதிகளின் கடிதத்துக்கு இனி இடமில்லை என்று. அது நூறு வீதம் உண்மை. அப்படியான நிலைமையை நாங்கள் உருவாக்கியுள்ளமையை அவரே ஒப்புக்கொண்டுள்ளார். நாமல் ராஜபக்சவின் மகன்கூட அரசியல்வாதிகளின் கடிதம் இல்லாமல் பரீட்சையில் தோற்றி வேலையைப் பெற முடியும். எமக்கு பொருளாதார அறிவு இல்லை, ஆங்கிலம் தெரியாது, அமெரிக்காவுக்கு எதிர்ப்பு போன்ற பல குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்கள். அது உண்மையென்றால் அமெரிக்கா விதித்த 45 வீத வரியை 20 வீதமாக எம்மால் எப்படிக் குறைக்க முடிந்தது என்பதை அவர்கள் சிந்திக்கவேண்டும்.

எம்மீது இவர்கள் சுமத்திய குற்றச்சாட்டுகள் எல்லாம் பொய் என்பதை நிரூபித்துவருகிறோம்.

நாம் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பலமடைந்து வருகிறோம் என்பதை ஏற்றுக்கொண்டே அமெரிக்கா எமக்கு வரிக் குறைப்பைச் செய்திருக்கின்றது.

ஏனைய பொருள்கள் தொடர்பிலும் வரியைக் குறைப்பதற்காக அமெரிக்காவுடன் பேசிக்கொண்டு இருக்கிறோம் -என்றார். (எ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக தெய்வீக இசையரங்கு நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் இசை ஆசிரியர் இசைக் கலைமணி திருமதி பங்கயச்செல்வி முகுந்தன் குழுவினரின் தெய்வீக இசையரங்கு நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளின் பல்வேறு அறப்பணிகளைப் பாராட்டிச் சங்கானைப் பிரதேச மருத்துவமனை நலன்புரிச் சங்கச் சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார். (ச-41-66)

## ஆன்மிக அருளுரை

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் ஆன்மிக அருளுரையில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணி முதல் இரவு 8.30 மணி வரை சிவகுரு ஆதீனமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்துகோண்டு "வேலை மறவேன்!" எனும் தலைப்பில் ஆன்மிக அருளுரை ஆற்றுவார். (ச-41-66)


## 20 ஆம் திருவிழா




## சூர்யோற்சவம்



படங்கள்: ஐ.சிவசாந்தன்



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் 19 ஆவது நாள் திருவிழாவான சூர்யோற்சவம் நேற்றுச் சனிக்கிழமை காலை 6.45 மணியளவில் சிறப்பாகவும், மிகவும் பக்திபூர்வமாகவும் இடம்பெற்றது. (ச-66)

## கார்த்திகை ஊர்தியில் நல்லூரான் வருகிறார்

கார்த்திகை நாதா காத்திட வருக!
கருணை வள்ளலே அருள் செய்ய வருக!
நேர்த்திகள் உனக்கு ஆயிரம் வைத்தோம்
நிரந்தரத் தீர்வை தமிழருக்குத் தர வருக!
ஏத்தியே நாளும் முறையிட்டு கேட்கிறோம்
எங்களின் கோரிக்கை ஏற்றிடவேண்டும்
போற்றியே உன்னை வேண்டியே நிற்கிறோம்
பூலோக கைலாச வாசனே! வருக வருக!

மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்

# நீர்வளக் கண்காட்சி நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.17

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு 'நிலத்தடிநீர் எங்கள் உயிர்நாடி' எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பல ஆய்வுத்துறைகளின் கூட்டுமுயற்சியாக வடமாகாண நீர்வளம் பேணுதற்கான பேராய்வுச் செயற்றிட்டத்தின் இரண்டாவது மாபெரும் நீர்வளக் கண்காட்சி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நல்லூர் பாரதியார் சிலைக்கு அருகில் அமைந்துள்ள நெசவுக் கைத்தொழிற்பயிற்சி நிறுவன வளாகத்தில் ஆரம்பமானது.

சுவீடன் பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞானம், சுற்றுச்சூழல், தொடர்பியல் ஓய்வுநிலைப் பேராசிரியரும், நீரியல் ஆய்வாளருமான ந.ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்ற கண்காட்சியின் ஆரம்பநாள் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கண்காட்சியைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

கண்காட்சியின் ஒரு கட்டமாக "ஊருணி" எனப் பெயரிடப்பட்ட ஆற்றுகைக் களம் கண்காட்சியின் தொடக்க நாளான நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், ஆய்வாளருமான அகிலன் பாக்கியநாதன் தலைமையில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. நிகழ்வில் பாரம்பரியக் கலைவடிவமான மம்பா பாடல் ஆற்றுகையைப் பாசையூரின் மூத்த அண்ணாவியார் கொலின்ஸ் மற்றும் அவரது அணியினர் ஆற்றினர்.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சமீபமாக அமைந்துள்ள நெசவுக் கைத்தொழிற்பயிற்சி நிறுவன வளாகத்தில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டுள்ள ஊருணிக் களத்தில் தினமும் மாலை6 மணி முதல் இரவு 7.30 மணி வரை பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, கண்காட்சி நிறைவு நாளான எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை இந்தக் கண்காட்சியைப் பொதுமக்கள் பார்வையிட்டுப் பயன்பெறமுடியுமெனக் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-66)



## தெய்வீகக்கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக.17

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் 'தெய்வீகக் கலை அர்ச்சனை' நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் திருப்புகழ் கச்சேரியும், நுண்கலைமாணி திருமதி கவிதா வாமதேவசர்மாவின் மாணவர்கள் வழங்கும் வீணை இசைநிகழ்வும், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன இசை மாணவர்கள் வழங்கும் வாத்திய இசை நிகழ்வும், உஷாகானம் நிறுவனம் வழங்கும் வயலினிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-41)

## கந்தன் கருணை

காலம் முழுதாகும் காலம்வரை கதியாளும்
கந்தன் கருணை மிகும் சிவமைந்தன்
கோலமோ நிகரில்லா அழகினையாளும்
கவின் மேவும் மயிலேறும் மேலோன்
சீலம் மிளிர் நல்லைப் பதியாளும்
சேவல் கொடி ஓங்கும் சுப்ரமணியம்
ஞாலத்துயர் போக்க வேலாளும்
ஞான சொரூபனின் சப்பரதச் சோமனங்காண்

திருமதி செல்வராணி பாக்கியநாதன்
வட்டுக்கோட்டை

## வாராயோ கந்தவேலா

கண்கவர் சப்பறத்தில்
கந்தன் உலாவருவான்
மின்னொளி பளபளக்க
அருள்பொழிய வருவான்
சூரனை வதைத்து
தேவரைக் காத்தான்
வள்ளியை மணந்து
குறவரை உயர்த்தினான்
தாழ்வுகளும் பலவுண்டு
வேலிகளும் பலமாயுண்டு
வினைதீர்க்கும் வேலுண்டு
வெற்றிக்குச் சேவலுண்டு
வேண்டுவோர் பலருண்டு
நீ பறந்துவர மயிலுண்டு

மு.ரமேஷ்
விநாயகர் சாந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 05 . 1944



மறைவு 14 . 08 . 2025

**சுப்பிரமணியம் தனபாலசிங்கம் (JP)**

புத்துவெட்டுவானைப் வதிவிடமாகவும் வவுனியா தோணிக்கல்லை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட துணுக்காய் மத்தியஸ்தர் சபை முன்னாள் தலைவரும், புத்துவெட்டுவான் கிராம அபிவிருத்தி சங்க முன்னாள் தலைவரும், வவுனியா தோணிக்கல் ஸ்ரீ நாகபூசணி அம்மன் தேவஸ்தான நிர்வாகத் தலைவருமான சுப்பிரமணியம் தனபாலசிங்கம் (அகில இலங்கை சமாதான நீதவான்) அவர்கள் கடந்த (14.08.2025) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (18.08.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல 32, புத்துவெட்டுவான் துணுக்காய் எனும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்துவெட்டுவான் பொதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

# நல்லூரில் வாள்வெட்டு; இருவருக்குப் படுகாயம்

யாழ்ப்பாணம் - நல்லூர்ப் பகுதியில், நேற்று இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இரண்டு குழுவினருக்கு இடையிலான கருத்து முரண்பாடே இந்தத் தாக்குதல்களுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதலை நடத்திய குற்றச்சாட்டில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-27)

# மின்சாரம் தாக்கி இளைஞன் உயிரிழப்பு!

*யாழ்ப்பாணம், ஓக. 17*

*யாழ்ப்பாணம் - ஆறுகால்மடம் பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞரொருவர் உயிரிழந்தார்.*

சங்கரத்தை துணவி பகுதியைச் சேர்ந்த மேற்படி இளைஞன், ஆறுகால் மடம் பகுதியில் உள்ள வாகனத் திருத்தகம் ஒன்றில் பணிபுரிந்து வந்துள்ளார். நேற்றுக் கடமையில் ஈடுபட்டிருந்த போதே, அவர் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-27)


## காணி விற்பனைக்கு

- ➤ இடம்-திருநெல்வேலி மக்கள் வங்கி அருகில்
- ➤ பரப்பு-1 1/2, 2, 2 1/2
- ➤ பலாலி வீதி- 75 மீற்றர்
- ➤ திருநெல்வேலி சந்தை-300 மீற்றர்

தொடர்புகளுக்கு: **077 253 2575**

## வாகன சாரதி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றின் நிர்வாக முகாமையாளருக்கு 40 வயதுக்கு மேற்பட்ட வாகன சாரதி தேவை.
தேவையேற்படின் தங்குமிட வசதியும், உணவும் வழங்கப்படும்.



**அனுபவத்துக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.**

தொடர்பு:- **077 120 9998**


# மரண அறிவித்தல்



## மனோகரன் அம்பிகாவதி

தோற்றம் 14.06.1963 | மறைவு 12.08.2025

நல்லூர் அரசடியை பிறப்பிடமாகவும் மணற்தரை லேன்-116 மற்றும் ஜேர்மனியை வதிவிட மாகவும் கொண்ட மனோகரன் அம்பிகாவதி கடந்த 2025.08.12 செவ்வாக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், அமரர் முருகராசு-தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், மனோகரனின் பாசமிகு மனைவியும், இராசேந்திரம் (ஜேர்மனி), பற்குணராசா (இலங்கை), சண்முகராஜா (அமரர்), கருணாநிதி (ஜேர்மனி) புனிதவதி (ஜேர்மனி), புஸ்பவதி (இலங்கை), கலாவதி (அமரர்), செல்வராஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரியும், சஞ்சீவன் (நிஷான்), வினோத், சஞ்சிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், கலேந்திராஜா (அமரர்), சகிலா (இலங்கை) தனேஸ்வரன் (பிரான்ஸ்), சுசிலா (லண்டன்), ரஜேந்திரன் (அமரர்), ரஜிதா (ஜேர்மனி), அஜந்தன் (பிரான்ஸ்), செனாத்ஜேந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், நடின் லக்ஷிமி, உஷேனி, தனுஷன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஐலா சோபி, வியோனா, நிலான் போன்றோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2025.08.20 புதன்கிழமை ஜேர்மனிய நேரப்படி மு.ப 9.00-12.30க்கு, Senne Friedhof, Brackweder Str.80, 33647 Bielefeld எனும் விலாசத்தில் நடைபெறும். இந்த தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்**
**077 6341 525**

(CS 3838) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BYD

இது மாற்றத்திற்கான நேரம். இது BYD இற்கான நேரம். இன்றே வருகை தாருங்கள்!




0112 125 125 இற்கு அழையுங்கள்

BYD பிரசுரங்களைப் பார்க்க ஸ்கேன் செய்யுங்கள்.

**BYD கொழும்பு:** இல. 447, யூனியன் வீதி, கொழும்பு 02.

**BYD காலி:** தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நுழைவு வீதி, நுகதுவ, காலி.

**BYD அம்பாறை:** இலக்கம் 431, ஹாஸ்பிடல் வீதி, அம்பாறை.

**BYD கண்டி:** இல. 175, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி.

**BYD குருநாகல்:** கொழும்பு வீதி, மல்பிட்டிய, போயகனே, குருநாகல்.

JKCG AUTO

idp

# EXPO 2025

## Australia & New Zealand

40+ Institutes Under One Roof



AUT · CQUniversity Australia · Curtin University · Deakin University · ECU Edith Cowan University · Federation University · Flinders University

James Cook University Australia · Kaplan Business School Australia · La Trobe University · Macquarie University Sydney-Australia · Massey University Te Kunenga ki Pūrehuroa University of New Zealand · Monash University

Murdoch University · nmit · QUT Brisbane Australia · RMIT University · Swinburne · The University of Adelaide · The University of Adelaide College

University of Auckland New Zealand · The University of Newcastle Australia · University of Otago New Zealand · The University of Sydney · The University of Western Australia · Torrens University Australia

UNSW Sydney · University of Tasmania · UTS · University of Wollongong Australia · Victoria University Melbourne Australia · Western Sydney University

21th August | 11 AM – 4 PM | Library Auditorium, University of Jaffna

23rd August | 11 AM – 4 PM | Taj Samudra Hotel, Colombo

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மாலையில் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். அலுவலகத்தில் சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள். வியாபாரம் வழக்கம்போலவே நடைபெறும்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். பணிச்சுமை குறையும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சிதரும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்குத் தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.


**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூலமாகும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். ஆதாயம் உண்டாகும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள்.


**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்றுவரும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும். நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**மகரம்:** உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். உணவு விடயத்தில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் மேம்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** காரியங்கள் வெற்றிகரமாகமுடியும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.





### கட்டைக்காட்டு

## கப்பலேந்தி மாதா ஆலயத் திருவிழா!

யாழ்ப்பாணம், ஓக.17

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டுப் பங்கின் வரலாற்றுச் சிறப்புமிக்க புனித கப்பலேந்தி மாதாவின் திருத்தலத்தின் ஆவணிமாதத் திருவிழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்புடன் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

கட்டைக்காட்டுப் பங்குத்தந்தை வணபிதா அமல்ராஜ் தலைமையில் ஆரம்பமாகி கூட்டுத் திருப்பலியாக திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து புனித கப்பலேந்தி மாதாவின் திருச்சொருபப் பவனியும், அதனைத் தொடர்ந்து கப்பலேந்தி மாதாவின் ஆசீர்வாதமும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

திருவிழாத் திருப்பலியில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், பக்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-27)

## சமய அறிவுப்போட்டியும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஓக.17

ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் தலைமையில் சைவ சமய அறிவுப்போட்டியும், கலாசாரப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளன. நிகழ்வில் பிரதம அதிதியாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி யமுனா ராயசீலன், சிறப்பு அதிதியாக வலி.தென் மேற்குத் தவிசாளர் க.ஜெசிந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25, 63)

## 'இன்றைய தமிழன்' நூல் வெளியீடு

கொடிகாமம், ஓக. 17

திருஞானசம்பந்தன் ஆத்மசகாயனின் 'இன்றைய தமிழன்' நூல் வெளியீட்டு விழா உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் உப அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் கொடிகாமம் ஏ-9 வீதியில் அமைந்துள்ள நட்சத்திர மஹால் மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக மறவன்புலவு க.சச்சிதானந்தன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25, 159-131)



## தேரடிச் சித்தருக்கு குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.17

சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் , ஈழத்துச் சித்தரான நல்லூர்த் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்தக் குருபூசை நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்.புற்றளை மகாவித்தியாலயத்தின் ஓய்வுநிலை அதிபர் ஆ.சிவநாதன் கலந்துகொண்டு 'நல்லூர்த் தேரடி' எனும் தலைப்பில் ஆன்மிக உரை ஆற்றினார். (ச-25,66)

## பண்டிநெல் களைக் கட்டுப்பாடு விழிப்புணர்வு அடுத்தவாரம்!

யாழ்ப்பாணம், ஓக.17

யாழ்.மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கை ஆரம்பிப்பதற்கு முன்னர் பண்டிநெல் களையைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விவசாயப் போதனாசிரியர்களால் பிரிவு ரீதியாக இந்த விழிப்புணர்வுச் செயற்பாடு மேற்கொள்ளப்படவுள்ளது.

நெல் ஆராய்ச்சிப் பிரிவுடன் இணைந்து மாவட்ட விவசாயத் திணைக்களம் நெற்செய்கையில் ஈடுபடவுள்ளது. இதன்போது பண்டிநெல் களையைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் விழிப்புணர்வு ஆலோசனை வழங்கப்படவுள்ளது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

**நீ பேசும் வார்த்தைகளின்மீது உனக்குள் கட்டுப்பாடு இருக்கவேண்டும்**
– அரவிந்தர் –

# அன்று வந்ததும் இதே நிலா…!


'மயிலிட்டித் துறைமுகத்தில் தாம் புறக்கணிக்கப்படுகின்றோம்' என்று அண்மையில் இடம்பெற்ற வலி. வடக்கு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வைத்து வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டியுள்ளனர் உள்ளூர் மீனவர்கள். தென்னிலங்கையில் இருந்து வடமாகாணக் கடற்பரப்புகளில் மீன்பிடிப்பதற்காக வந்துள்ள 'நீண்டநாள் படகுகள்தான்' மயிலிட்டித் துறைமுகத்தின் கணிசமான பகுதியை ஆக்கிரமித்துள்ளன. அத்துமீறிய மீன்பிடிக்காக இந்திய மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட படகுகளும் துறைமுகத்தின் பெரும் பகுதிகளில் நங்கூரமிடப்பட்டுள்ளநிலையில், தமது சிறிய படகுகளை நிறுத்துவதற்கு இடமில்லாமல் பெரும் அந்தரப் பிழைப்பாக தமது பாடு மாறியிருக்கின்றது என்று நொந்திருக்கின்றனர் மயிலிட்டி மீனவர்கள்.

இங்கே அவர்கள் முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டின் சாராம்சம் என்னவென்றால், வெறுமனே இந்திய மீனவர்கள் மட்டும் ஆக்கிரமித்து உள்நுழைந்து தமது பொருளாதாரத்தை அழிக்கவில்லை. ஏட்டிக்குப் போட்டியாக சிங்கள மீனவர்களாலும் தங்களின் பொருளாதாரம் வகைதொகையின்றிச் சின்னாபின்னமாக்கப்படுகின்றது என்பதே. மயிலிட்டித் துறைமுகம் சீரமைக்கப்பட்டு, பாவனைக்காக வழங்கப்பட்டபோது, ஏதோ 'வராதுவந்த மாமணியாகவே' ஸ்ரீலங்கா அரசாங்கம் அதை ஒப்பனை செய்தது. மயிலிட்டித் துறைமுகத்தின்மூலம் வடமாகாண மக்களின் வாழ்வாதாரம் வளம்பெறப்போகின்றது, உள்ளூர் மீனவர்களின் பொருளாதாரம் உயரப்போகின்றது என்றெல்லாம் அறிக்கைகள் சீறிப்பாய்ந்தன. ஆனால், தென்னிலங்கை மீனவர்களின் பொருளாதாரத்துக்கான ஒரு விரிவுபட்ட வாய்ப்பாக மயிலிட்டி மாறியிருக்கின்றது என்பதே உண்மை.

எல்லாவற்றையும்விட இங்கே நாம் ஆழ்ந்து கவனிக்கவேண்டிய விடயமொன்று உள்ளது. மூன்று வருடங்களின் முன்னர் தெல்லிப்பழைப் பிரதேசசெயலகத்தில் இடம்பெற்ற வலி.வடக்கு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் இதே குற்றச்சாட்டை மயிலிட்டி மீனவர்கள் முன்வைத்தனர். இந்த வருடத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் அதே குற்றச்சாட்டை அவர்கள் முன்வைத்திருக்கின்றனர். அப்படியாயின், கடந்த மூன்று வருடங்களாக உள்ளூர் அப்பாவி மீனவர்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படவில்லை என்பதும், மூன்று வருடங்களுக்கு முன்னர் மணித்தியாலக்கணக்கில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தால் எந்தப் பயனும் இல்லை என்பதும் இதன்மூலம் புலப்படுகின்றதல்லவா?

எனவே இந்த விடயத்தில் மிகவும் ஆழமான அக்கறையை ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செலுத்தவேண்டும். வடமாகாண மீனவர்கள் தமிழக மீனவர்களையோ அல்லது இந்திய மீனவர்களையோ வெறுக்கவில்லை. அவர்களால் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளையே வெறுக்கின்றனர். அதே அத்துமீறிய பொருளாதாரப் பறிப்பை தென்னிலங்கை மீனவர்கள் செய்தால், அது சரியென்று ஆகாது. அத்துடன், மூன்று வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற வலி.வடக்கு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இன்று பரிகசிப்புக்கு உரித்தான விடயமாக மாறியுள்ளதைப் போன்று, இந்த வருடம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இன்னும் மூன்று வருடங்களில் கேலிக்கும் கிண்டலுக்கும் உரித்தான விடயமாக மாறிவிடக்கூடாது. இவ்வாறான விடயங்களில்தான், தாம் தனித்துவமானவர்கள் என்பதை அநுர அணியினர் நிரூபிக்கவேண்டியிருக்கின்றது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# விளையாட்டு மைதானங்களை துரிதமாகப் புனரமையுங்கள்!



## ஜனாதிபதி அறிவுறுத்து

**கொழும்பு, ஓக.17**

**விளையாட்டுக் கலாசாரத்தை உருவாக்குவதற்கான திட்டத்தைத் தயாரிக்குமாறு அறிவுறுத்தியுள்ள ஜனாதிபதி, விளையாட்டுகளை ஊக்குவிப்பதில் விளையாட்டுச் சங்கங்களின் அதிகபட்ச பங்களிப்பைப் பெறவும், அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கவும் உத்தரவிட்டுள்ளார்.**

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுத் தொடர்பான 2025 வரவு- செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் பயன்பாடு குறித்த மீளாய்வு மற்றும் 2026 ஆம் ஆண்டு தொடர்பான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் குறித்த பூர்வாங்கக் கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். இந்த நோக்கத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்வது விளையாட்டு வளர்ச்சிக்கு மட்டுமன்றி, நாட்டின் ஆரோக்கியம், சமூக நலன், குற்றங்களைக் குறைத்தல், போதைப்பொருள் பாவனையில் இருந்து மீட்டல், கூட்டுமுயற்சியை உருவாக்குதல் மற்றும் துடிப்பான தொழிற்படையை உருவாக்குதல் போன்ற பல நோக்கங்களை ஒரே நேரத்தில் அடையும் முதலீடாகும். வீரர்களுக்குத் தேவையான வாய்ப்புகளை வழங்குவது விளையாட்டு அமைச்சின் முன்னுரிமைப் பணியாகும். பாடசாலை விளையாட்டு அபிவிருத்தியில் கவனம்செலுத்தப்படவேண்டும். இதற்காகத் தேவையான நிதியை ஒதுக்கத் தயாராகவுள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# பேருந்து விபத்து ஒருவர் பலி
## 22 பேர் காயம்

மொனராகலை, ஓக.17

மொனராகலை வெலியாயப் பகுதியில் இலங்கை போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பயணிகள் பேருந்தும், சுற்றுலா சென்ற தனியார்பேருந்தும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 22 பேர் காயமடைந்துள்ளனர். குறித்த விபத்துநேற்று இடம்பெற்றது. விபத்தில் தம்பகல்லப் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய இலங்கை போக்குவரத்துச்சபை பேருந்தின் சாரதியே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்துத் தொடர்பாக மொனராகலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# ஒரேநாளில் 2000 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக.17

பொலிஸ் அதிகாரிகளின் தவறான நடத்தைகளைப் முறைப்பாடளிக்க அறிமுகப்படுத்தப்பட்ட வட்ஸ் அப் எண்ணுக்கு ஒரே நாளில் 2000க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தை நேரடியாகத் தொடர்புகொள்ளும்வகையில், பொதுமக்களுக்கு 071 - 8598888 என்ற புதிய வட்ஸ்அப் இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# விசேட சோதனை 689 பேர் கைது

கொழும்பு, ஓக.17

நாடளாவிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட தேடுதல் நடவடிக்கைகளில் கடந்த 24 மணிநேரத்தில் 689 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குற்றங்களுடன் நேரடியாக தொடர்புடைய 24 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 242 பேரும் அவர்களில் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)




# 5கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் இருவர் கைது

வத்தளையில் 5 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான போதைப்பொருளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். இதன்போது சுமார் 300 கிலோ நிறையுடைய கஞ்சாப் போதைப்பொருளே பறிமுதல்செய்யப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை** 18.08.2025
திங்கட்கிழமை - ஆவணி 02
சுபநேரம் : 12.05 - 01.35
ராகுகாலம் : 07.35 - 09.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Obituary Notice



## DR. VENGADASALAM SUTHARSHAN

**Birth**
**06 - 01 - 1976**
**Death**
**15 - 08 - 2025**

**Consultant General and Laparoscopic Surgeon**
**(MBBS (Colombo), Master of Surgery - Colombo)**
**MRCS (Eng), MRCSEd, FMIS (ind), FMAS (AMASI), FCCSL, FICS**
**Dip in Laparoscopic Surgery (France), PG Certificate in Medical Education (Cordiff)**
**Fellow Royal College of Surgeons Sri Lanka,**
**Immediate past President - (Jaffna Medical Association)**
**President SLAMADS - (Sri Lanka Association of minimal Access and Digital Surgeons)**

Dr. Vengadasalam Sutharshan, , originally from Thampalai Achchuveli and residing in Kondavil, attained his heavenly abode on the day before yesterday, Friday, 15th August 2025.

He was the beloved son of the couple Vengadasalam and Kamaladevy, the beloved son-in-law of the late Kamalanathan and Mangayatkarasi couple, the loving husband of Gayathiri, the beloved father of Senthana, Jananthanan, and Thanujanan, the loving brother of Thivahar and Centuran, and the loving brother-in-law of Thirshan, Pirabajini, and Suvithira.

His final rites will be conducted today, Sunday, 17th August 2025, at his residence around 11.00 AM (forenoon). The mortal remains will then be taken to the Hindu Crematorium in Kondavil for cremation rites around 12.30 PM (noon).

We request all relatives, friends, and well-wishers to accept this intimation.

Gnana Vairava Street
Kondavil,
Jaffna

Information: Family
Thirshan - 077 749 6868
Thivahar - 077 671 9304
Centuran - 077 732 1582

(CR/45833) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்

06 • 01 • 1976



மறைவு

15 • 08 • 2025

## Dr. வெங்கடாசலம் சுதர்சன்

**Consultant General and Laparoscopic Surgeon**
**MBBS (Colombo), Master of Surgery (Colombo)**
**MRCS (Eng), MRCSEd, FMIS (Ind), FMAS (AMASI), FCCSL, FICS,**
**Dip in Laparoscopic Surgery (France), PG Certificate in Medical Education (Cardiff)**
**Fellow Royal College of Surgeons Sri Lanka,**
**Immediate past President - Jaffna Medical Association**
**President - SLAMADS (Sri Lanka Association of minimal Access and Digital Surgeons)**

தம்பாலை அச்சுவேலியை பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வெங்கடாசலம் சுதர்சன் அவர்கள் நேற்று முன்தினம் (15.08.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் வெங்கடாசலம் - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும், காயத்திரியின் அன்புக் கணவரும், சேந்தனா, ஜனந்தனன், தனுஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திவாகர், செந்தூரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திர்சான், பிரபாஜினி, சுவித்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.30 மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 45832) E

ஞானவைரவர் வீதி
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்

தகவல் : குடும்பத்தினர்
திர்சான் - 077 749 6868
திவாகர் - 077 671 9304
செந்தூரன் - 077 732 1582

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனையாளர் தேவை

யாழ்ப்பாணம் Stanley வீதியில் உள்ள மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர் தேவை. (Bajaj, Yamaha)

- உற்பத்திக்கு தொடர்பான அனுபவம் இருத்தல் வேண்டும்.
- 18 - 40 வயதுடையவராக இருத்தல் வேண்டும்.

**075 845 4576, 021 227 4605**

## வேலையாட்கள் தேவை

வெதுப்பகம், உணவகம் ஒன்றிற்கு வெதுப்பக வேலையாட்கள், கொத்து றைஸ் போடுபவர், உணவு பரிமாறுபவர் தேவை.
போதைப்பொருள் பழக்கமற்ற வேலையாட்கள் தேவை.

தொடர்பு:- **074 001 5060**

## ஸ்ரீ விசுவேசப் பிள்ளையார் ஆலயம்
### (தோப்படைப்பு விநாயகர்)

ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2025

காலம் :- **31.08.2025** ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- பிற்பகல் 3.00 மணி
இடம் :- ஆலய மண்டபம்

ஆலய அங்கத்தவர்கள் அனைவரையும் குறித்த நேரத்திற்கு சமூகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம். பிரேரணைகள் இருப்பின் மூன்று நாட்களுக்கு முன் சமர்ப்பிக்கவும்.

ஆலய பரிபாலன சபையினர்
சார்பில் செயலாளர்

(CS/59151) J-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் செல்லதுரை வீதியில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்டலாம். தோட்டம் செய்யலாம். விரும்பினால் 2 பேர் பிரித்து எடுக்கலாம். ஞாயிறு காலை 11.00 மணிக்குப் பின் அழைக்கவும்.

தொடர்பு: **074 010 6595**

## பெண்களுக்கான வேலை வாய்ப்பு

திருநெல்வேலியில் இயங்கும் பூமாலை கடைக்கு பெண்பிள்ளைகள் வேலைக்கு தேவை.
25000 தொடக்கம் 35000 வரை சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**077 279 9992, 077 646 7131**

## வேலை வாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் பிரபல்யமான உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலைக்கு பணியாளர்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர் (Waiter)
  Basic Salary: 45000/=
- சமையல் உதவியாளர் (Kichen Helper)
  Basic Salary: 45000/=
- வரவேற்பாளர் பெண்:
  Basic Salary: 45000/=

மேலும் திறைமைக்கேற்ப Salary அதிகரிக்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிபரத்தை பின்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு: **076 467 4313**

## காணி உடன் விற்பனைக்கு

யாழ் K.K.S வீதியில் சிவன் கோயிலுக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 150 அடி நீளமும் 150 அடி அகலமும் கொண்ட காணித்துண்டு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: **077 723 2535**

## வீடு வாடகைக்கு தேவை

இருவர் கொண்ட குடும்பம் (வங்கி உத்தியோகத்தர்) ஒன்றிற்கு யாழ் நகரத்திலிருந்து 3 Km தூரத்திற்குள் வீடு வாடகைக்குத் தேவை
வீடு நன்றாக பராமரிக்கப்படும்

தொடர்பு: **075 235 9254**

## வீடு விற்பனைக்கு

இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டில் நான்கு பக்கமும் சுற்று மதிலுடன் கூடிய ஒரு பரப்பும் ஒன்பது குழியும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
**077 656 9936**

## மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 10 . 1928



மறைவு
11 . 08 . 2025

### திருமதி மேரி பிலோமினா ஜெகராஜா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கொழும்பு பம்பலப்பிட்டியுவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி பிலோமினா ஜெகராஜா கடந்த 11.08.2025 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசவ் அன்ரன் ஜெயராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான S.A.யோசவ் - மரியம்மா தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான யோசவ்பொன்னையா - முத்தம்மா தம்பதியரின் மருமகளும், டொளி, எமில், நெவில், மெறில் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அச்சிலிஸ் மற்றும் லியப்போல், பேணடெற், (பேபி) கலிஸ்ரஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜெயரட்ணம் ஜெயக்குமார் மற்றும் அலோமா, ஊனா, சேபால ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜிற், ஜெகான், யோசுவா, அடம், பெண், றொசெயில், ஆடியா, அலன்கா ஆகியோரின் பேர்த்தியும், எய்டன், கைசன், ஒலிவியா, கோப், கிங்ஸ்லி, றிசி, ஸ்காலற், அலிஸ், காடன் ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான அருட்தந்தை செல்வராஜா, மேரி அக்கினஸ், சிங்கராயர், ராணி மற்றும் நவம், அருட்சகோதரி ஜெரோம், பேபி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைத் திருப்பலி நாளை 18.08.2025 திங்கட்கிழமை பம்பலப்பிட்டி கிளிவெற் பிளேஸ் தேவாலயத்தில் காலை 8.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும், அன்னாரின் திருவுடல் ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் 18.08.2025 முற்பகல் 10.30 - 3.30 வரை பார்வைக்காக வைக்கப்பட்டு கனத்தையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,**
**சகோதரர்கள்.**
**மகள்: 076 247 6640, 077 747 2095**

**தகவல்:**
**ஜோசப் கலிஸ்ரஸ்**
**72, நக்கா வீதி.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
30 . 03 . 1934



மறைவு
15 . 08 . 2025

### V.M. பரமநாதன் கமலாம்பிகை

காரைநகர் களபூமி தெருவடிப்பிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் அரசடி வீதியையும் காரைநகர் சம்பந்தர்கண்டியை வசிப்பிமாகவும் கொண்ட V.M.பரமநாதன் கமலாம்பிகை அவர்கள் கடந்த (15.08.2025) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதர் - சேதுபிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான V.முருகேசு - சுந்தரம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற V.M.பரமநாதனின் அன்பு மனைவியும், ராஜேஸ்வரி, முருகேசு, வரதராசா, ஆனந்தராஜா, சற்குணராசா, தயானந்தராசா ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், கந்தையா, பாலசிங்கம், சண்முகம் அவர்களின் சகோதரியும், காலஞ்சென்ற சண்முகரட்ணம் மற்றும் யோகேஸ்வரி, இரட்ணேஸ்வரி, சிவகங்கா, மனோகரி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற வேல்குமரன் மற்றும் ஞானதாட்சாயினி, நிதர்சன், உமாதர்சினி, கமலருபன், விதுசா, விதுஷன், மிதுனா, டனுஷியா ஆகியோரின் பேர்த்தியாரும், காவியன், அமிர்தா ஆகியோரின் பூட்டியாரும், காலஞ்சென்றவர்களான V.M.சண்முகம், V.M.கந்தையா, V.M.பேரம்பலம், செல்லம்மா, பொன்னம்மா அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு காரைநகர் சம்பந்தர்கண்டியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**பிள்ளைகள்**
ராஜேஸ்வரி- 0770596476, முருகேசு - 0774577807
வரதராசா- 0779534021, ஆனந்தராஜா - 0779272917
சற்குணராசா- +44 7471 571778, தயானந்தராசா- 0765253411

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS/59153) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணவில்லை



பெரியகுளம் பகுதி கண்டாவளையைச் சேர்ந்த விஸ்வலிங்கம் கனகரத்தினம் என்பவரை (வயது 65) கடந்த 15 நாட்களாக காணவில்லை இவரை கண்டவர்கள் அல்லது விபரம் அறிந்தவர்கள் கீழுள்ள இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும். மனநலம் பாதிக்கப்பட்டவர்.

**077 110 0309** பெரியகுளம், கண்டாவளை

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Clerk | : 0755489898 |
| நிகழ்ச்சி தயாரிப்பாளர் | : 0773322527 |
| Bill Clerk | : 0777738715 |
| Heavy Vehicle Driver | : 0771202733 |
| Accountant | : 0776696385 |
| Office Incharge | : 0741166057 |
| சமையலாளர் | : 0770085277 |
| Administration | : 0778738834 |
| Customer Care | : 0755489898 |
| Social media Presenter | : 0778738834 |
| ARSM | : 0741166057 |
| Decoration Helper | : 0777750318 |
| Waiter/Kitchen Helper | : 0766587149 |
| பராமரிப்பாளர் | : 0770085277 |
| Assistant Sales Manager (Basic 60,000) | : 0779969661 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு:
**dewmasweb.com**

வேலையாட்கள் தேவையா? :
**0777733368**

**DEWMAS**, 51, Amman Road, Nallur

# நல்லூரில் வெடிகுண்டு: புரளியால் நேற்று பதற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ்ப்பாணம் - நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வெடிகுண்டு இருப்பதாக மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்பால் அங்கு நேற்றுப் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட இந்தத் தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் ஆலயச் சூழலில் விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அத்துடன், மோப்பநாய் சகிதம் தேடுதல்களும் மேற்கொள்ளப் பட்டன.

எனினும், பின்னர் அந்த அழைப்பு போலியானது என்பதை பொலிஸார் உறுதிப்படுத்தினார்கள். தவறான தகவலை வழங்கி பதற்றத்தை ஏற்படுத்திய நபரைக் கைதுசெய்வதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ம-20)

## கல்லீரல் தேவை

**உடனடி - கல்லீரல் தானதாரர்கள் தேவை - உயிர் காக்கும் உதவி**

எங்கள் குடும்பத்தில் ஒருவருக்கு அவசரமாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை (Liver Transplant) தேவை.

உங்கள் தன்னார்வ தானம் அவருக்கு புதிய வாழ்க்கையைத் தரலாம்.

**தகுதிகள் :**
(சம்பந்தப்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்)

**வயது: 20 - 50 வயது.**
**எடை: 50 - 70 கிலோ.**
**இரத்த வகை: O (ஓ) மட்டுமே.**
**மதுபானம் உபயோகிப்பவர்கள் அல்லாதவர்கள் (no alcohol).**

முக்கியக் குறிப்பு:
தானதாரராகத் தேர்ந்தெடுக்கப்படுவது முழுமையான மருத்துவ, மனோதத்துவ மற்றும் ஆய்வு பரிசோதனைகளுக்குப்பிறகு மட்டுமே.

தானதாரர்கள் (Donors) 03 முதல் 06 வாரங்களில் முழுமையாக குணமடைவார்கள்.

**தொடர்புகளுக்கு:**
**தொலைபேசி: 0703011765**

உதவி தர விரும்புமா? தயவு செய்து உடனே தொடர்பு கொள்ளுங்கள் - உங்கள் ஒரே முடிவு ஒருவரின் வாழ்க்கையை மறு வழங்கும்.

# நல்லூரானுக்கு இன்று கைலாசவாகன உற்சவம்

யாழ்ப்பாணம், ஓக.17

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்த சுவாமி ஆலயப் பெருந்திருவிழாவின் கைலாசவாகன உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதேவேளைவ் ஆலயத்தின் சந்தான கோபாலர் உற்சவம் இன்று காலை 6.45 மணியளவில் இடம்பெறவுள்ளது. (ச-66)

World's No.1 Air Treatment Company — Midea
Inventor of Inverter Air Conditioning — TOSHIBA Leading Innovation >>>
Inventor of Air Conditioning — Carrier turn to the experts
Home of the world's greatest
**Telesonic**

இலங்கையில் Air conditioning மற்றும் Refrigeration solutions வழங்குவதில் முன்னணி நிறுவனமாக டெலிசோனிக் லங்கா தனித்துவமானதாக நிற்கிறது. இது Midea, Toshiba, and Carrier போன்ற மதிப்புமிக்க உலகளாவிய நிறுவனங்களால் ஊக்குவிக்கப்படுகிறது.

**வளர்ந்து வரும் எங்கள் குழுவில் இணையுங்கள்!**

Air conditioning மற்றும் Refrigeration solutions வழங்குவதில் முன்னணி நிறுவனமாக டெலிசோனிக் லங்கா. Air conditioning துறையில் அனுபவம் உள்ள அல்லது தற்போது Air conditioning தொடர்பான செயற்திட்டங்களில் பயிற்சி பெறும் ஆற்றல் மிக்க, உத்வேகம் கொண்ட நபர்களுக்கு அற்புதமான வாய்ப்புகளை வழங்குகிறது.

**தொழினுட்ப வல்லுநர்கள் / சீனியர் தொழினுட்ப வல்லுநர்கள்**

**நாங்கள் வழங்குவது:**
- அனுபவம் வாய்ந்த பொறியாளர்கள் மற்றும் தொழினுட்ப வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு.
- கவர்ச்சிகரமான ஊதியத் தொகுப்பு.
- நீண்ட கால தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள்.

**யார் விண்ணப்பிக்கலாம்**
- Refrigeration மற்றும் Air conditioning துறையில் தொழில்சார் பட்டம். NVQ 4 அல்லது அதற்கு மேல்.
- Air conditioner-களில் நிறுவல், சேவை மற்றும் பழுதுபார்ப்பில் 3 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் உள்ள நபர்கள்.
- உத்வேகம் உடைய விவரம் சார்ந்த மற்றும் கற்றுக்கொள்ள ஆர்வமுள்ளவர்கள்

**எங்களுடன் சேர்ந்து, தொழிற்துறையில் சிறந்த ஒன்றைக் கொண்டு உங்கள் வாழ்க்கையைத் தொடங்குங்கள்!**

**உங்கள் சுயவிபரக்கோவையை இப்போதே அனுப்பவும்:**
WhatsApp : +94 76 044 6578
மின்னஞ்சல் : careers@telesoniclanka.com

மனிதவளத்துறை
டெலிசோனிக் லங்கா
எண் 18, டெய்சி வில்லா அவென்யூ,
கொழும்பு 04.

Telesonic
Comfort ...

## பணிப்பெண் தேவை

கொழும்பு, பம்பலப்பிட்டியில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு தங்கிநின்று வேலைசெய்யக்கூடிய 45 வயதிற்குட்பட்ட பணிப்பெண் தேவை.

**074 134 5831**

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி,கோண்டாவில் சந்திக்கு மிக அருகாமையாக 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-

**077 584 3977**

(CS/59029) J-1

## விதை நெல் விற்பனைக்கு

இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு முளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைக் கொண்ட 3 1/2 மாத BG 34.6 விதை நெல் விற்பனைக்கு உண்டு.

**077 659 2044**

## காணி விற்பனைக்கு

நாவற்குளி நுணாவில் பாலத்திற்கு அருகாமையில் 9 பரப்பு 4.5 குளி காணி விற்பனைக்கு உண்டு

தொடர்பு: **077 132 3348**


(CS 59144) E

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில், நீண்ட உறுதிப் பத்திரம் உள்ள பம்பலப்பிட்டியில் உள்ள பிரபல பாடசாலைகள் மற்றும் கோவிலுக்கு அருகில் 2 BR / 2 BHK தொடர்மாடி வீடு முதலாம் மாடியில் விற்பனைக்கு உண்டு. (மொத்தம் 14 வீடுகள் மாத்திரம் உள்ள வீட்டுத்தொகுதி)

தொடர்புகளுக்கு:
**077 789 5760**

(CR 45836) E



# சுற்றுலாவிகளின் பஸ்ஸில் திடீரெனத் தீ; சேதம் தவிர்ப்பு

யாழ்ப்பாணம், ஓக.17

நல்லூரில் தரித்துநின்ற சுற்றுலாவிகள் பஸ் ஒன்றில் திடீரெனத் தீப் பற்றிய நிலையில் உடனடியாகத் தீ அணைக்கப்பட்டு சேதங்கள் தவிர்க்கப்பட்டன.


இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது. பதுளையில் இருந்து யாழ்ப்பாணம் வந்த சுற்றுலாப்பயணிகளின் பஸ் சங்கிலியன் பூங்காவுக்கு அருகில் நிறுத்திவைக்கப் பட்டிருந்தநிலையில் இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது. (ச-25, 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

தோற்றம்
18 . 01 . 1939

மறைவு
18 . 07 . 2025



கடந்த 18.07.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் ஐயாத்துரை துரைசிங்கம்

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (17.08.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வநாயகம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

CS/59142) J-1

குடும்பத்தினர்

# தவறான முடிவெடுத்து பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் – இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், குடும்பப் பெண்ணொருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். நண்பியிடம் 25 பவுண் நகையை கொடுத்து ஏமாந்ததால் ஏற்பட்ட விரக்தியாலேயே அவர் தவறான தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

(ம–27)

## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் சுப்பர் மார்க்கட்டு பெண் பணியாளர்கள் தேவை.

- Administration
- Computer Billing & cashier
- Sales Assistant

வயது எல்லை 18 - 40
யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

077 419 5209, 077 419 5218

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் செல்லதுரை வீதியில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்டலாம். தோட்டம் செய்யலாம். விரும்பினால் 2 பேர் பிரித்து எடுக்கலாம். ஞாயிறு காலை 11.00 மணிக்குப் பின் அழைக்கவும்.

தொடர்பு: 074 010 6595

## கார் விற்பனைக்கு

Nissan Tradsunny B12 கார் விற்பனைக்கு
Year 1988, Engine 1300 cc, Gears 5,
Air conditioning Working, Power Steering,
Power Break.

தொடர்பு:- 076 736 6655
0777 495 956

# இருபத்தியிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
19.09.1931

மறைவு
21.08.2003

அமரர்
## பொன்னையா பாலசிங்கம்
(Ret. Superintendent of Audit)

அன்பிற்கும் பண்பிற்கும்
இலக்கணமாய்
வாழ்ந்து - எங்களை
அவனியிலே வாழ்வாங்கு வைத்த -
தந்தையே!
இருபத்தியிரண்டாமாண்டு நினைவு
நாளில் உங்களை நினைந்து
வணங்குகின்றோம் - அப்பா!

166/3, சேர்பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி

(CS 591116) E

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டி

# மரண அறிவித்தல்



மண்ணிற்கு
28.11.1946

விண்ணிற்கு
13.08.2025

## தம்பிராசா பத்மாதேவி

யாழ் சண்டிலிப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும், வவுனியா தோணிக்கல்லை வசிப்பிடமாகவும், கனடா Scarborough ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா பத்மாதேவி அவர்கள் கடந்த (13.08.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பறுவதம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தம்பிராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கமலாதேவி, தெய்வேந்திரம், இரங்கநாதன், இரவீந்திரன் மற்றும் சிறீபவன், லீலாதேவி, பகீரதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசரட்ணம், சரஸ்வதிதேவி (லண்டன்), ருக்குமணிதேவி, புவனேஸ்வரி, ஜெயதேவி, கந்தசாமி (ஓய்வுநிலை மக்கள் வங்கி முகாமையாளர்), தனபாக்கியம், காலஞ்சென்றவர்களான பொன்னையா, இராசதுரை, சிவஞானம், தவமணி, யோகலட்சுமி மற்றும் பாலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற தங்கரத்தினம், அற்புதமேரி, செல்வம் (கொழும்பு), காலஞ்சென்றவர்களான தியாகராஜா, திருச்செல்வம் மற்றும் சர்வேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரியும், கெங்காதரன் (சுவிஸ்), காலஞ்சென்ற மனோகரன், தவறஜனி (சுவிஸ்), தயாளினி (இலங்கை), அமுதாகரன் (கனடா), சசிகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், றமணி (சுவிஸ்), சிவகுமாரி (கனடா), பரமேஸ்வரலிங்கம் (சுவிஸ்), சிவானந்தன் (இலங்கை), றதீபா (கனடா), வினோஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், செந்துரன் (பிரான்ஸ்), பிருந்தாபன் (இலங்கை), அரவிந் (சுவிஸ்), அஜித் (சுவிஸ்), கீர்த்தன் (சுவிஸ்), எரோன் (கனடா), அசீஸ் (கனடா), அனோஜ் (கனடா), அஸ்வின் (கனடா), தர்சனா (இலங்கை), பிரணவி (பிரான்ஸ்), திலக்சா (சுவிஸ்), ராகவி (சுவிஸ்), ஆர்த்திகா (சுவிஸ்), அரிக்சா (கனடா), அஸ்விகா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், ரிஷாந் (இலங்கை), கவினாஸ் (இலங்கை), சயானா (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது சண்டிலிப்பாய் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
077 716 9817

(CS/59115) J-1

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## DIGIT WEB LANKA
PRIVATE LIMITED

## SALES MANAGER JOB VACANCY

### JOB SUMMARY

We are seeking a passionate and results-driven Sales Manager with a proven sales track record and a sharp analytical mindset. The ideal candidate will be skilled in driving sales performance, understanding customer psychology, motivating teams, and developing effective sales strategies. Prior eCommerce experience is not mandatory — we value sales instincts, leadership capability, and the ability to think both statistically and strategically.

### KEY RESPONSIBILITIES

- Develop and execute sales strategies aligned with company goals.
- Understand customer behavior to tailor the sales approach.
- Motivate, train, and guide the sales team to exceed targets.
- Implement structured sales campaigns and performance metrics.
- Foster a customer-first culture in all sales processes.
- Analyze sales data to inform decision-making and strategy.
- Conduct regular performance reviews with constructive feedback.
- Collaborate with marketing and product teams on promotions and offers.
- Stay updated with market trends and competitor activities.

### CANDIDATE PROFILE

- Proven background in sales, ideally with leadership experience.
- Strong interpersonal and communication skills.
- Ability to think like a customer and create persuasive sales approaches.
- Strategic and analytical mindset with data-driven decision-making skills.
- Experience in motivating and building high-performance teams.
- Thrives in a fast-paced, goal-oriented environment.
- Knowledge of sales psychology and customer behavior patterns.

### PREFERRED QUALIFICATIONS

- Degree in **Business, Marketing, Psychology, or related field** (preferred but not mandatory).
- Familiarity with CRM systems and sales performance metrics.
- Experience coaching and mentoring teams.

SEND YOUR CV TO US !

**admin@digitweb-jf.com**

KINDLY SEND YOUR CV 2 WEEKS AFTER PUBLICATION

**ONLY CANDIDATES WHO MEET THE STATED REQUIREMENTS WILL BE CONSIDERED**

No 17,Thapalpetti Lane,Thirunlveli, Jaffna | www.digitweblk.com

## விற்பனை நிர்வாகிகள் தேவை

LANKA ALUMINIUM
High Quality Extrusions

**வவுனியா** | **யாழ்ப்பாணம்**

- We are a public quoted company with multinational connections and Sri Lanka's premier manufacturer of high-quality aluminium extrusions.
- Our group of companies offers a wide range of products, including steel roofing, MDF boards, steel & aluminium builders' hardware, and various other construction- related items

### தகைமகள்

- ✓ ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் விற்பனை / சந்தைப்படுத்தல் அனுபவம் (Hardware Industry)
- ✓ வாடிக்கையாளர்களுக்கு நேரடியாகவும். விநியோகஸ்தர்கள் மூலமாகவும் விற்பனை செய்வதில் அனுபவம் இருத்தல் வேண்டும்.
- ✓ க.பொ.த உயர்தரச் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
- ✓ சந்தைப்படுத்தல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தகுதி பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ✓ பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்கள் பயிற்சியாளர்களாக நியமிக்கப் படுவார்கள்.

### சலுகைகள்

- ✓ கவர்ச்சிகரமான அடிப்படை சம்பளம்.
- ✓ மாதாந்த ஊக்கத்தொகை.
- ✓ உணவுக் கொடுப்பனவு.
- ✓ இரவு நேரக் கொடுப்பனவு.
- ✓ மோட்டார்களுக்கான கொடுப்பனவு. எரிபொருள்.
- ✓ அடிப்படைக் கொடுப்பனவு.

இவ் விளம்பரம் வெளியான 7 நாட்களுக்குள் உங்கள் விண்ணப்பத்துடன் இரண்டு பரிந்துரையாளர்களின் பெயர்களுடன் asokatijalanka aluminium.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

**GENERAL MANAGER**
**LANKA ALUMINIUM INDUSTRIES PLC**
**1ST FLOOR, LAKSHMANS BUILDING,**
**321, GALLE ROAD, COLOMBO 03.**
**TEL: 077 799 6308**
**asokat@lanka-aluminium.com**

## காணி அல்லது களஞ்சியசாலை உடனடியாக தேவை

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் பிரதான வீதிக்கு அருகாமையில் 100 பர்ச்சஸ் காணி அல்லது களஞ்சியசாலை கொள்வனவிற்கு தேவை.

விபரங்களை WhatsApp மூலம் அனுப்பவும்.

**0777 753 620**

| | |
|---|---|
| LONDON | - 104500/- |
| NEW ZEALAND | - 150500/- |
| SWETZERLAND | - 151700/- |
| PARIS | - 98000/- |
| MALAYSIA | - 43500/- |
| DUBAI | - 27000/- |
| AUSTRALIA | - 104100/- |
| CANADA | - 160500/- |
| SPAIN | - 130000/- |
| SWEDEN | - 135000/- |
| GERMANY | - 145000/- |
| ITALY | - 57000/- |
| JAPAN | - 82200/- |
| CHINA | - 78000/- |
| USA | - 105000/- |

Condition Apply

KOKO VISA Accept

## SPECIAL FARES

### VISA

| | | | |
|---|---|---|---|
| MALAYSIA | - 12500 | CHIINA | - 25000 |
| CAMBODIA | - 18500 | ETHIOPIA | - 24500 |
| INDIA | - 11000 | INDONESIA | - 35500 |
| EGYPT | - 18500 | USBEKISTAN | - 19500 |
| VIETNAM | - 18500 | KENYA | - 20500 |
| AZERBAJIAN | - 18500 | | |

* STUDENT SPECIAL FARE 20% *
* SPECIAL RATES FOR GROUP BOOKING 20% *
We Arrange Europe Documentation

**I FOUR TRAVELS & TOURS**
#378, George De Silva Mawatha, Colombo -13.
0765858770 I 0777262672

## காணி விற்பனைக்கு

கோப்பாய் வைத்தியசாலைக்கு அண்மையாக 3 1/2 பரப்பு சுற்றுமதில் காணி. நல்ல அயற்சூழலில். குழாய்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
**077 903 7538**

## காணி விற்பனைக்கு

யாழ் உடுவில் மகளிர் கல்லூரிக்கும். மானிப்பாய் பிரதான வீதிக்கும் மிக அண்மையில் அமைந்துள்ள ஏறத்தாழ 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. காணி வாங்க விரும்புவோர் மட்டும் தொடர்பு கொள்ளவும். தரகர் வேண்டாம்.

(CR/45810) J-1

தொடர்புகளுக்கு:- **077 726 0194**

## வாடகைக்கு

வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு முன்பாக இல. 8 புகையிரத வீதியில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள், இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள், நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

(CR/45809) J-1

**011 250 4281, 076 663 7572, 076 698 8092**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன் - விசுவாசத்தை காத்துக்கொண்டேன் ( 2 திமொத்தேயு 4:7 )

பிறப்பு 01 . 04 . 1982



இறப்பு 16 . 08 . 2025

### திருமதி றொபேட் ராஜ்குமார் ஆன் சுதாசினி

இளவாலையைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றொபேட் ராஜ்குமார் ஆன் சுதாசினி அவர்கள் நேற்று (16.08.2025) சனிக்கிழமை இறைவனிடம் நித்திய இளைப்பாறுதல் அடைந்தார்.

அன்னார், றொபேட் ராஜ்குமார் அவர்களின் பாசமிகு மனைவியும் மேரி றொஷானி (A/L), ஆன் றொபினா (O/L), போல் றொபின்சன் (தரம் 7) அவர்களின் பாசமிகு தாயாரும், காலம்சென்ற மரியாம்பிள்ளை சூசைதாசன் மற்றும் லில்லி அன்ரனி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை அந்தோனியாப் பிள்ளையின் பாசமிகு மருமகளும், கமல்ரன் மரிந்திரன், ஆன் வினோதினி ஆகியோரின் அன்பு சகோதரியும், செயமதீபன், பிறிஜ்யிற் மற்றும் மேரி கேற்றூட் சோஜினி, யூட் அசோக்குமார், அருட்கோதரி மேரி றூபினி (A.C) மற்றும் காலஞ்சென்ற பிரியதர்சினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் 18.08.2025 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இருந்து புனித கதிரை மாதா ஆலயத்திற்கு பி.ப3.00 மணிக்கு இரங்கல் திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்படும். தொடர்ந்து கதிரை மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 45840) A

## மரண அறிவித்தல்



### கந்தையா கோபாலபிள்ளை

காரைநகர் கருங்காலியை பிறப்பிடமாகவும் அல்வின் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கோபாலபிள்ளை நேற்று (16.08.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், வேலுப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், வடிவாம்பிகையின் அன்புக் கணவரும், நவரூபன், சங்கீதா (ஆசிரியர், யா/வேலணை மத்திய கல்லூரி), கஸ்தூரி ஆகியோரின் தந்தையாரும், பரஞ்சோதி, தவமணிதேவி ஆகியோரின் சகோதரரும், சுந்தரலிங்கம், பேரானந்தசிவம், உருத்திரேஸ்வரன், காலஞ்சென்ற சிவநேசன் மற்றும் பரஞ்சோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 167 3249

(CR 45838) A




## கடையடைப்புப் போராட்டம் காலத்துக்கு ஒவ்வாதது!

*சிவசேனை அமைப்பு சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், ஒக.17

மீண்டுவரும் பொருளாதார நகர்வுகளை மீட்டெடுக்கும் இன்றைய காலகட்டத்தில் ஹர்த்தால் உள்ளிட்ட போராட்டங்கள் அவசியமற்றன.

அந்தவகையில் நாளைய ஹர்த்தாலை சைவர்களும் தமிழ்மக்களும் புறக்கணிக்கவேண்டும் என சிவசேனை அமைப்பின் தலைவர் சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது அழைப்புவிடுக்கப்பட்ட கடையடைப்புப் போராட்டம் என்பது கடைந்தெடுத்த கயவர்கள் விடுத்துள்ள அழைப்பு. இதைச் சைவர்கள் குறிப்பாக தமிழர்கள் புறக்கணிக்கவேண்டும்.

கடை அடைப்புக்கான தேவை இன்றைய சூழலுக்கு தேவையற்ற ஒன்று. அத்துடன் கடையடைப்பு என்பது காலத்துக்கும் ஒவ்வாத போராட்டம் - என்றார். (ச-27)

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 12 . 1953



மறைவு 14 . 08 . 2025

### திருமதி மனோகரன் வசுந்திராதேவி (பிள்ளை)

இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோகரன் வசுந்திராதேவி கடந்த (14.08.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-பராசக்தி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-இராசம்மா தம்பதிகளின் மருமகளும், திரு மனோகரனின் (தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை - ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் கமலேஸ்வரி, காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் சுமத்திராதேவி, இந்திரராணி, பத்மாசனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் இரத்தினமணி, காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், துரைராசா மற்றும் மல்லிகாதேவி, காலஞ்சென்ற சந்திரராஜா ஆகியோரின் மைத்துனியும், கஜேந்திரன் (சுவிஸ்), கஜந்தன் (பிரான்ஸ்), கஜவிந்தன் (பிரான்ஸ்), சிவனியா, கஜந்தரூபன் ஆகியோரின் அன்புத் தயாரும், சிவதர்சினி (சுவிஷ்), வனிதா (பிரான்ஸ்), சுபாஷினி (பிரான்ஸ்), ஐங்கரன் (ஆசிரியர்), சுபோசனா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஓவியா, ஒளிநிலா, மதுமிதா, கவிஷா, ஹரினி, காவியன், அக்சரன், ஆத்விகா, லக்ஷ்மிகா, சாதுரியன், வான்நிலா, அபிநயா, கோல்நிலா, ஹரிகாலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2025) திங்கட்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இணுவில் தெற்கு,
இணுவில்

தகவல்: குடும்பத்தினர்
076 643 1300

(CS 3834) E

## மரண அறிவித்தல்



### திருமதி புவனேஸ்வரி அம்பலவாணர்

கரனவாய் வடக்கு, கரவெட்டி சக்கலாவத்தைப் பிறப்பிடமாகவும், சந்தை வீதி, ஆவரங்கால் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி அம்பலவானர் அவர்கள் நேற்று (16.08.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் வாரித்தம்பி-சின்னம்மா தம்பதியின் அன்பு மகளும், மயில்வாகனம்-காசிப்பிள்ளை தம்பதியின் அன்பு மருமகளும் அம்பலவாணர் அவர்களின் அன்பு மனைவியும் யசோதா, குமாரசிவம் ஆகியோரின் அன்புத் தாயாரும், ரக்சாயினி, சாருஜா, ஹருனி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஆவரங்கால் மேற்கு,

தகவல்:
குடும்பத்தினர்.
குமாரசிவம்-077 844 8052

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மடுமாதா...

சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
மன்னார் மடுத் திருத்தலத்தின் திருவிழா நேற்றுமுன்தினம் வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. பல்லாயிரம் மக்கள் திருவிழாவுக்கு வருகை தந்திருந்தனர். திருவிழாவில் நகைகள் திருட்டு, உடமைகள் திருட்டு என்பன பரவலாக இடம்பெற்றுள்ளன. இது தொடர்பில் பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சிலர் ஒருங்கிணைந்த குற்றக் குழுவாக இயங்கிவந்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன், திருட்டு உள்ளிட்ட பல்வேறு குற்றங்கள் தொடர்பில் தேடப்பட்ட சிலரின் ஒளிப்படங்களைப் பொலிஸாரால் பொது இடத்தில் காட்சிப்படுத்தி யிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.
(அ-ம)

## மாகாணசபைத்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மாகாணசபைத் தேர்தலை நடத்தி, அதிகாரங்களை உரியவாறு ஒப்படைப்போம் என்று இந்த அரசாங்கம் வாக்குறுதி வழங்கியுள்ளது. எனவே, அந்த வாக்குறுதிக்கு அமைய செயற்படுவது கட்டாயமாகும். சாக்குப் போக்குகள் மூலம் காலத்தைக் கடத்துவதற்கு நாங்கள் இடமளிக்கமாட்டோம். மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் தயாராகவே உள்ளன. அனைத்து எதிர்க்கட்சிகளும் தேர்தலைக் கோரிவருகின்றன. ஆனால், அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை.
கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அரசாங்கத்துக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. இதனால், அரசாங்கம் அச்சமடைந்துள்ளது. தேர்தலில் பின்னடைவைச் சந்தித்ததால் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதிலிருந்து அரசாங்கம் பின்வாங்கிவருகின்றது - என்றார். (அ-ம-44)

## நம்பிக்கையில்லாப்...

சிக்கல்களைச் சுட்டிக்காட்டி, சட்டமா அதிபரிடம் சபாநாயகர் அலுவலகம் விளக்கம் கோரியுள்ளது. இதனால் நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது.
அருண ஜயசேகர பிரதி அமைச்சராக பதவி வகிக்காத காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரமுடியுமா? என ஆளுங்கட்சி தரப்பில் கேள்வி எழுப்பட்டுள்ளது.
அத்துடன், இலங்கை வரலாற்றில் பிரதி அமைச்சர் ஒருவருக்கு எதிராக இதற்கு முன்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவில்லை. பிரதி அமைச்சர் என்பவர் அமைச்சரவை கூட்டுப் பொறுப்பு அற்றவர் எனவும் ஆளுங்கட்சியின் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
எனினும், ஜனாதிபதி வெளிநாடு செல்லும் பட்சத்தில் பதில் பாதுகாப்பு அமைச்சராக பிரதி அமைச்சரே செயற்படுகின்றார். எனவே, அவருக்கு எதிராகப் பிரேரணையைக் கொண்டுவர முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அடுத்த நாடாளுமன்ற அமர்வின் போது இது தொடர்பில் சபாநாயகர் தெளிவுபடுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-44)

## ஜனாதிபதி...

அரசியற் போக்குத் தொடர்பில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர ஊடகவியலாளர்கள் சந்திப்பை நடத்தி கருத்துத் தெரிவித்துள்ளார். இதன்போதே, ஜனாதிபதி அநுர மீதும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீதும் கடும் விமர்சனங்களை அவர் முன்வைத்துள்ளார்.
இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கையைக் கைப்பற்றுவதற்குச் சந்தர்ப்பம் பார்த்துக் கிடக்கின்றன. எனவே, எமது நாட்டின் பாதுகாப்பையும் இருப்பையும் நாம் உறுதிப்படுத்தவேண்டும். ஆனால், ஜனாதிபதி அநுரகுமார இந்தியாவினதும் மேற்கு நாடுகளினதும் கைக்கூலியாக மாறியுள்ளார். அந்த நாடுகளின் நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுவதே அநுரவின் தற்போதைய பணியாக உள்ளது.
சர்வதேச சக்திகளுக்கு எதிராக அணிசேரா கொள்கையைக் கடைப்பிடிப்பதாகவே ஜனாதிபதி அநுர தரப்பினர் அறிவித்தனர். ஆனால், இன்று அவர்கள் தங்களின் அரசியற் கொள்கையில் இருந்து முற்றாகப் பின்வாங்கியுள்ளனர். அணிசேராக் கொள்கையில் இருந்து விலகி, சார்புக் கொள்கையுடன் செயற்பட ஆரம்பித்ததால் தான் நான் ஜே.வி.பி.யில் இருந்து விலகிச் செயற்பட்டேன் - என்றார்.
(அ-ம-75)

## புத்தகத்...

திருவிழாவின் இறுதிநாள் இன்றாகும்.
யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில், கண்காட்சிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரத்தியேக பகுதியில் இந்தப் புத்தகத் திருவிழா நேற்றுமுன்தினம் ஆரம்பித்திருந்தது. நேற்று இரண்டாவது நாளாகவும் பொதுமக்கள் பெரும் வரவேற்றை வழங்கியிருந்தனர். புத்தகத் திருவிழாவின் இறுதி நாளான இன்றும் பெருமளவு மக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம)

## சமஷ்டியை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய கட்சிதான் ஜே.வி.பி. குறைந்தபட்ச அதிகாரத்துக்கு இணங்காத அவர்கள், புதிய அரசியலமைப்பின் ஊடாக தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வை தருவார்கள் என நம்புவது முட்டாள்தனமாகும்.
இலங்கையை இதுவரைகாலமும் ஆண்ட சிங்கள அரசுகளின் மற்றுமொரு 'கார்பன் கொப்பி'தான் இந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாகும். எனவே, குறுகிய அரசியல் நோக்கங்களை உதறித் தள்ளிவிட்டு வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் கூட்டுப் போராட்டத்துக்கு தயாராகவேண்டும். அரசியற் கட்சிகள், சிவில் அமைப்புகள் ஓரணியில் திரளவேண்டும். இந்தப் போராட்டத்துக்கு தென்னிலங்கையிலுள்ள முற்போக்கு சக்திகளையும் இணைத்துக்கொள்ளவேண்டும்.
அவ்வாறான போராட்டங்களுக்கு எமது ஆதரவு எப்போதும் கிட்டும். ஆட்சியாளர்கள் தீர்வை தங்கத் தட்டில் வைத்துத் தரப்போவதில்லை. நாம் தான் அதனை வென்றெடுக்கவேண்டும் - என்றார். (அ-ம-44)

## புங்குடுதீவுப்...

வெள்ளிக்கிழமை புங்குடுதீவைச் சேர்ந்த பொது அமைப்புகளும், பொதுமக்களும் இணைந்து புங்குடுதீவு பிரதான வீதியில் போராட்டம் நடத்தியிருந்தனர். இதன்போது, சம்பவ இடத்தில் நின்ற நபரொருவர், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபருடன் நெருக்கமானவர் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பொலிஸாரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.
இதையடுத்து, குறித்த நபர் பொலிஸாரால் விசாரணைகளுக்காகக் கொண்டு செல்லப்பட்டார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்தநபர் இதற்கு முன்னர் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் நேரடித் தொடர்புடையவர் என்று விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் கூறியுள்ளனர்.
(அ-ம-66)

## 27 வீதமான...

உலக உணவுத் திட்டத்தின் தரவுகளை அடிப்படையாக வைத்து, இலங்கையின் உணவுப் பாதுகாப்புத் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் சிறப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே, இலங்கையில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் போதிய உணவில்லாமல் பாதிக்கப்பட்டுள்ளன என்றும், 27 வீதமான குடும்பங்களின் நிலைமை மேலும் மோசமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.
இலங்கையில் கடந்த வருடத்தின் இறுதியில், ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் ஊட்டச்சத்துக் குறைபாடு 12 வீதமாக இருந்தது. தற்போது அந்த எண்ணிக்கை 17 வீதமாக அதிகரித்துள்ளது. அத்துடன், 2019ஆம் ஆண்டில் 12 சதவீதமாக இருந்த வறுமைவீதம் தற்போது 24 வீதமாக அதிகரித்துள்ளது என்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கூறியுள்ளது.
பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னைய காலங்களில் இருந்த ஊதியங்களே இப்போதும் அதிகளவானவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மை ஏற்பட்டமைக்கான பிரதான காரணங்களில் இதுவும் ஒன்று என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (அ-ம-75)

## சொத்துக்...

விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த விசாரணைகளின் அடிப்படையிலேயே, அவர்கள் வருமானத்தை விடவும் அதிகளவு சொத்துகளைச் சேர்த்துள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது என விசாரணை ஆணைக்குழு வெளிப்படுத்தியுள்ளது.
முன்னாள் அமைச்சர்கள் பலர், நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களின் பெயர்களில் சொத்துக்களை வைத்துள்ளனர். வருமானவரிப் பிரச்சினைகள் மற்றும் இதர சட்டச் சிக்கல்களில் இருந்து தப்புவதற்காக அவர்கள் இவ்வாறு வேறு நபர்களின் பெயர்களில் தமது சொத்துகளைப் பதுக்கியுள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.
முன்னாள் அமைச்சர்கள் மட்டுமல்லாமல், முன்னாள் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர். அனைவருக்கும் எதிரான விசாரணை நடவடிக்கைகள் மற்றும் கைதுகள் எதிர்வரும் மாதமளவில் இடம்பெறும் என்றும் நம்பப்படுகின்றது. (அ-ம-75)

## ஹர்த்தாலுக்கு...

தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் கே. கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.
வடக்கு- கிழக்கில் அதிகரித்துள்ள இராணுவப் பிரசன்னம் மற்றும் முல்லைத்தீவு முத்து ஐயன்கட்டில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு-கிழக்குத் தழுவிய ரீதியில் நாளை திங்கட்கிழமை ஹர்த்தால் ஒன்றை மேற்கொள்வதற்கு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.
இந்தநிலையில் இதுதொடர்பாக ஆராய்வதற்காக கூட்டப்பட்ட வவுனியா வர்த்தகர் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில் அநேகமான நிர்வாகசபை உறுப்பினர்கள் அன்றையதினம் வியாபாரநிலையங்களைத் திறக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.
வவுனியா வர்த்தகர் சங்கம் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குவதில்லை என்ற தீர்மானத்தை எடுத்துள்ளது. அதற்கமைய நாளை திங்கட்கிழமை வியாபாரச் செயற்பாடுகள் வழமை போன்று நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுக்காகக் காத்திருந்த 1,700 பேர் படுகொலை

காசாவில் உணவுப் பொருள்கள் பெறுவதற்காக வரிசையில் நின்ற 1,700 பேர் இதுவரை சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

## காணி விற்பனைக்கு

புன்னாலைக் கட்டுவன் ஆயாக் கடவை, பிள்ளையார் ஆலயத்தில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் நல்ல செம்மண் வளம் உள்ள 2 பரப்பு. 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும், பண்ணை அமைப்பதற்கும் ஏற்றது.

தொடர்பு: 077 129 8159

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

## தங்குமிட வசதிக்கான வேண்டுகை

SLIIT NORTHERN UNI யில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் தேவைப்படுகின்றது. எனவே கந்தர்மடம், நல்லூர், திருநெல்வேலி,யாழ்ப்பாணத்திற்கு அருகாமையில் உள்ள வீடுகள் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வாடகைக்கு வழங்குபவர்கள் எங்களுடன் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றீர்கள்.

NEED ACCOMMODATION !

Visit our Website

021 7534 807, 076 141 2881
northernuni.lk apply@northernuni.com

# தாவடியில் விபத்து: ஒருவர் அருந்தப்பு!

தாவடி பகுதியில் மோட்டார்சைக்கிளும் காரும் நேற்று விபத்துக்கு உள்ளானதில், ஒருவர் இலேசான காயங்களுடன் தப்பினார். யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை பக்கம் நோக்கி கார் பயணித்துக் கொண்டிருந்தவேளை, மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் அவதானமின்றி திடீரென வீதியை கடக்க முற்பட்டதாலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம–27)

# ட்ரம்ப் புடின் பேச்சு இந்தியா வரவேற்பு!

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இருவரும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதை வரவேற்பதாக இந்தியா அறிவித்துள்ளது. பேச்சுவார்த்தைகளும் கலந்துரையாடல்களுமே தீர்வைத் தரும் என்றும் இந்தியா தெரிவித்துள்ளது. (ம)

## காணி விற்பனைக்கு

காங்கேசந்துறை (K.K.S) சந்தியில் பிரதான வீதியையும் கடற்கரையினையும் முகப்பாகக் கொண்ட 7 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.
Hotels, Cabanas-க்கு மிகவும் சிறந்த இடம். பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த காணியாகும்.

தொடர்பு: 077 655 5677
071 429 9935

## காணி விற்பனைக்கு

நெல்லியடி லேன், கொக்குவில் சாயி துர்க்கா ஆலயத்திலிருந்து 40m தூரத்தில் 5 பரப்பு காணி மூன்று துண்டுகளாக பிரிக்கப்பட்டு (1 1/2 பரப்பு) விற்பனைக்கு உண்டு. மூன்று வழிப் பாதையும் உள்ளது.

தொடர்புகளுக்கு:- 077 287 9586

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர் கோவிலுக்கு அருகாமையில் உள்ள, நல்லூர் குறொஸ் றோட்டில், 2 நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய, 11 பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்கு உண்டு. சுற்றுலா விடுதி, கல்யாண மண்டபம், தொடர்மாடி வீடு கட்டுவதற்கு உகந்தது. விலை பேசி தீர்மானிக்கலாம். மேலதிக விபரங்களுக்கு தொடர்ப கொள்ள

WhatsApp
077 801 5156

## காணி விற்பனைக்குண்டு

யாழ் அரியாலை நெடுங்குளம் சந்திக்கு அருகாமையில் A9 பாதையில் 9 பரப்பு சச்சதுரமான வெற்றுக்காணி விற்பனைக்குண்டு

தொடர்பு: 070 160 2608

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் ஆண்/பெண் வேலையாள் தேவை. (சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 076 632 3554

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல வைத்திய சாலையில் பின்வரும் பதவிகளுக்கான தகுந்த ஊழியர்களை எதிர்பார்க்கின்றது.

- Office Boy (அலுவலக உதவியாளர்)
- Operation Theatre Boy (ஆப்ரேஷன் தியேட்டர் உதவியாளர்)
- Security Guard (பாதுகாப்பு காவலர்)
- Cleaning Staff (Female) துப்பரவு பணியாளர்
- Store Keeper (Male) களஞ்சிய காப்பாளர்
- Accountant Assistant (Female) உதவி கணக்காளர்

குறிப்பு :-
யாழ் நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
G.S Character Certificacate
உங்கள் சுயவிபரக் கோவையினை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

074 202 7318

(CS/59150) J-1

## வேலையாட்கள் தேவை

பூநகரியில் தென்னந் தோட்டம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 818 9450

## வேலையாட்கள் தேவை

கொழும்பு / யாழ்ப்பாணம் / கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- காசாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துநர் (உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்)

தொடர்பு: 077 386 6250

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் பின்வரும் வேலையாட்கள் தேவை.

- விற்பனையாளர் - Phone Shop
- துப்பரவுப் பணியாளர் - விடுதி

தொடர்பு:- 077 858 5887

(CS/59095) J-1

## வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் 1 1/2 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 075 777 6373

(CS/59146) J-1

## காணிகள் விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் ஊரெழு பிள்ளையார் கோவிலிற்கு அருகாமையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 711 5438, 077 707 3709

(CS 59127) E

## பணிப்பெண் தேவை

யாழ் திருநெல்வேலியில் உள்ள வீடொன்றிற்கு வீட்டுவேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்பு:- 077 308 3007

## Spoken English & Grammar Classes

Grade 7 to பட்டதாரிகள்
International School Students
K.Ganesh B.A (UOP)

077 766 8725

## கணி விற்பனைக்கு

55 New செம்மணி வீதி,
கல்வியங்காட்டில் 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு.
Point Pedro வீதியில் இருந்து 350m
நல்லூர் கோவில் - 1.7 km

தொடர்பு:- 077 185 4870

(CS/58876) J-1

## வேலையாட்கள் தேவை

வீட்டுப் பணிப்பெண்
(30 வயதிற்கு உட்பட்டவர்கள். சம்பளம் 100.000 வரை வழங்கப்படும்)
நிகழ்வுகளின் போது புகைப்படம் எடுப்பவர் (Prosonal photographer)

075 880 7718

## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியின் ஓரமாக கோப்பாய் சந்தியில் இருந்து 100m தூரத்தில் 2 பரப்பும் 1 குழியும் காணி விற்பனைக்கு உண்டு.

077 132 3348

(cs 9261) (2.6)

## ஆண் வேலையாட்கள் தேவை

யாழ் அரியாலையில் இயங்கும் பல்பொருள் அங்காடிக்கு ஆண் வேலையாட்கள் தேவை

தொடர்பு: 077 540 0425

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.08. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

அகத்தாரே வாழ்வார்என் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி இருப்பாரே மேலைத்
தவத்தால் தவஞ்செய்யா தார்.

– நாலடியார்

A

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஆவணி 01 ஞாயிற்றுக்கிழமை (17.08.2025) சிகரம் :152

# சுமந்திரனின் ஹர்த்தால்?

நிலாந்தன்



சுமந்திரன் ஒரு கிறிஸ்தவர். அவரைச் சுற்றியிருக்கும் யாருமே அவருக்கு கடந்த 15ஆம் திகதி மடுப் பெருநாள் என்பதைச் சொல்லவில்லையா? இது நல்லூர் திருவிழாக் காலம் என்பதைச் சொல்லவில்லையா? இந்த இரண்டு திருவிழாகளுக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் வருவார்கள் அவர்களை ஏற்றி இறக்கப் பேருந்துகள் ஓடும். குறிப்பாக மடுத்திருவிழாவுக்கு இந்துக்களும் போவார்கள். அது மத பேதமின்றி இனபேதமின்றி யாத்திரிகர்கள் வந்துகூடும் ஓராலயம். பெருநாளை முன்னிட்டு சில நாட்களுக்கு முன்னரே யாத்திரிகர்கள் வரத்தொடங்கிவிடுவார்கள். எனவே தொடர்ச்சியாக சில நாட்களுக்கு வடக்கிலிருந்து பேருந்துகள் ஓடும். இந்த விடயங்களை ஏன் சுமந்திரன் கவனத்தில் எடுக்கவில்லை? அவரைச் சுற்றியிருக்கும் யாருமே இதை அவருக்குச் சொல்லவில்லையா? அல்லது தனது மக்களின் பண்பாட்டு பெருவிழாக்களைக் குறித்துச் சிந்திக்கமுடியாத அளவுக்கு அவர் தன்னுடைய மக்களின் பண்பாட்டு இதயத்திலிருந்து 'புறத்தியாக' நிற்கின்றாரா? இது போன்ற பண்பாட்டு விடயங்களைச் சுட்டிக்காட்டுவதற்கு அவருக்கு அருகில் யாரும் இல்லையா? அல்லது அவர் யாரிடம் கேட்டு இதுபோன்ற முடிவுகளை எடுக்கிறார்? அல்லது அவர் முடிவெடுக்கும்பொழுது யாரிடமும் எதையும் கேட்பதில்லையா?

அவர் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பிரதிநிதி அல்ல. அவருடைய வார்த்தைகளில் சொன்னால் மக்களின் ஆணை அவருக்கு இல்லை. கட்சிக்குள்ளும் அவர் பதில் செயலாளர்தான். ஆனால் அவர்தான் கட்சியின் முகமாக, கட்சியின் எல்லாமுமாகத் தோன்றுகிறார். அண்மையில் அவர் வெளி நாடுகளுக்குப் போயிருந்தார். அங்கே அவர் ராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேசியதாக அவருடைய அரசியல் எதிரிகள் கூறுகிறார்கள். வரும் செப்ரெம்பர் மாதம் நடக்கவிருக்கும் ஜெனிவாக் கூட்டத் தொடரை முன்னிட்டு அவர் அவ்வாறு மேற்கத்திய ராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேசியதாகக் கூறப்படுகிறது.

அதுதனிப்பட்ட பயணம் என்று சுமந்திரன் கூறியிருக்கிறார். ஆனால் அவர் ராஜதந்திரிகளைச் சந்தித்ததாகப் புலம்பெயர்ந்த தமிழர் தரப்புகள் கூறுகின்றன. அவை கூறுவது உண்மையாக இருந்தால், அவர் கட்சியின் அனுமதியோடுதான் அந்தச் சந்திப்புகளில் ஈடுபட்டாரா? அங்கே என்ன கதைக்கவேண்டும் என்பதனை கட்சி ஏற்கனவே கூடி முடிவெடுத்திருந்ததா? அவ்வாறான சந்திப்புகளில் என்ன கதைக்கப்பட்டது என்பதனை அவர் கட்சிக்குத் தெரிவித்தாரா? அதை அவர் மக்களுக்குக் கூறத் தேவையில்லையா?

நடப்பு நிலைமைகளைப் பார்த்தால், அவர் யாரோடும் எதையும் கலந்தாலோசித்து முடிவெடுப்பதில்லை என்றுதான் தோன்றுகிறது. கடந்த 20 மாதங்களாக, அதாவது கடந்த ஆண்டின் தொடக்கத்தில் தனது கட்சி ஆட்களாலேயே நிராகரிக்கப்பட்ட பின், அவருடைய நடவடிக்கைகளைத் தொகுத்துப்பார்த்தால், ஏறக்குறைய மந்திரித்து விட்ட சேவலைப் போல அவர் எதையோ நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறார். அடிக்கடி காணொலிகளில் வருகிறார். கட்சிக்குள் தன்னைப் பலப்படுத்துவது கட்சியின் முகமாகத் தொடர்ந்தும் தோன்றுவது; கட்சியின் தீர்மானங்களைத் தானே எடுப்பது; மத்திய குழுவைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது; எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கத்தக்கதாக கட்சி தொடர்பான ராஜதந்திர நகர்வுகளைத் தானே முன்னெடுப்பது....இதைத்தான் கடந்த 20 மாதங்களாக அவர் செய்துவருகிறார். கட்சிக்குள் யாரும் அதை எதிர்ப்பதாகத் தெரியவில்லை.

அவர் கடையடைப்புக்கு அழைப்புவிடுத்த விடயம் சரியானது. அதை மனோ கணேசனும் ஆதரித்திருந்தார். படையின் முகாம்கள் மக்கள் குடியிருப்புகள் மத்தியில் இருப்பதனால்தான் கடந்தவாரம் முல்லைதீவில் இடம்பெற்றது போன்ற சம்பவங்கள் நிகழ்வதாக சுமந்திரன் கூறுகிறார். தமிழர் தாயகத்தில் படையினரை நீக்கக் கோரி தமிழ் மக்கள் போராடவேண்டும். அதில் சந்தேகம் இல்லை. அந்த இடத்தில் சுமந்திரன் சரி. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் கடந்த 16ஆண்டுகளாக படைமயநீக்கம் முழுமையாக நிகழவில்லை. இலங்கையின் மொத்தப் படைக் கட்டமைப்பில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பகுதி தமிழ் பகுதிகளில்தான் நிலைகொண்டிருக்கிறது என்று உத்தியோகப்பற்றற்ற புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. எனவே படைமயநீக்கம் அவசியம். அதை வலியுறுத்தி தமிழ் மக்கள் போராட வேண்டியதும் அவசியம். அதில் யாருக்கும் சந்தேகம் இல்லை.

ஆனால் பிரச்சினை எங்கே வருகிறது என்றால், அதற்காக கடையடைப்பு ஒரு பொருத்தமான போராட்டமா என்பதுதான். சுமந்திரனை எதிர்க்கும் பலரும் கடையடைப்பையும் எதிர்க்கிறார்கள். அது தவறு. அரசியலில் சில சமயம் பிழையான ஆட்கள் சரியான செயல்களைச் செய்வதுண்டு. கடையடைப்பு என்ற போராட்ட வடிவம் குறித்து கேள்விகளை எழுப்பலாம். வேறு போராட்ட வடிவங்களைக் குறித்துச் சிந்திக்கலாம். அரசாங்கத்துக்கு நோகக் கூடிய விதத்திலும் அரசாங்கத்தை ஆதரிக்கும் நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் விதத்திலும் குறிப்பாக, ஐ.நா.வின் கவனத்தை ஈர்க்கும் விதத்திலும் அதைவிடக் குறிப்பாக ஐ.நா.வில் தமிழ் மக்கள் தொடர்பான தீர்மானத்தைக் கொண்டுவர இருக்கும் "கோ குரூப்" நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் விதத்திலும் அழுத்தங்களைப் பிரயோகிக்கத்தக்க போராட்ட வடிவங்களைச் சிந்திக்கலாம்.

அரசாங்கத்துக்கு நோகத்தக்க விதத்தில் போராடுவது என்று சொன்னால் சம்பவம் நடந்த மாவட்டத்தில் ஒரு மக்கள் பேரெழுச்சியை ஒழுங்குபடுத்தலாம். அதை ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தலாம். இது முதலாவது. இரண்டாவதாக, அரசு அலுவலகங்களை முடக்கக்கூடிய விதத்தில் அரசு அலுவலகங்களைச் சுற்றி வளைக்கலாம். மூன்றாவதாக, ஐ.நா.வில் முடிவெடுக்கும் நாடுகளின் தூதரகங்களின் முன்னாள் கவனவீர்ப்புப் போராட்டங்களை ஒழுங்குசெய்யலாம். அந்தக் கவனவீர்ப்புப் போராட்டங்கள் படைப்புத்திறன் மிக்கவைகளாக இருக்கவேண்டும். மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணிக்கு வந்த பொழுது நிகழ்த்தப்பட்ட அணையா விளக்கு போராட்டத்தைப் போல. எனவே இதுபோன்ற பல வழிகளிலும் அரசாங்கத்துக்கு நோகக்கூடிய விதத்தில் போராடலாம். கடையடைப்பு அழைப்பவருக்கு இலகுவான ஒரு போராட்டம். மாறாக, கடைகளை மூடும் வியாபாரிகளுக்கும் பொதுப் போக்குவரத்தை நிறுத்தும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் அன்றாடம் காய்சிகளுக்கும் அன்றாடம் வேலை செய்பவர்களுக்கும் அதனால் இழப்பு ஏற்படும். அந்த இழப்பைக்கூட நாட்டுக்காக ஒருநாள் செய்யும் தியாகம் என்று நியாயப்படுத்த முடியும். ஆனால் கடையடைப்போ அல்லது பொது முடக்கமோ எதுவாக இருந்தாலும் அது அரசாங்கத்துக்கு நோக வேண்டும். அரசாங்கத்துக்கு நோகக்கூடிய விதத்தில் அழுத்தமாகப் போராடவேண்டும்.

அப்படிப்பார்த்தால் கடையடைப்பு அரசு அலுவலகங்களுக்கு நோகாது. ஏனென்றால் கடையை அடைத்தாலும் பொதுப்போக்குவரத்தை முடக்கினாலும் அரச அலுவலகங்கள் தொடர்ந்து இயங்கும். ஏன் பாடசாலைகளே இயங்கும். ஆசிரியர்கள் வருவார்கள்; அதிபர்கள் வருவார்கள்; மாணவர்கள் மட்டும் வரமாட்டார்கள். நாளை, இரண்டாம் தவணை விடுமுறை முடிந்து பாடசாலைகள் மீண்டும் தொடங்குகின்றன. எனவே கடையடைப்பைவிட அழுத்தமான, கூர்மையான படைப்புத்திறன்மிக்க அறவழிப் போராட்டங்களை சிந்தித்து முடிவெடுக்கவேண்டும். அதற்குக் கூடிக்கதைக்கவேண்டும். அதைவிட முக்கியமாக தமது சொந்த மக்களை நேசிக்க வேண்டும். தனது மக்களை விசுவாசிக்கும் எந்த ஒரு செயற்பாட்டாளருக்கும் போராட்டத்தின் வழி தானாகத் திறக்கும்.

அதிலும் குறிப்பாக உலகில் வெற்றிபெற்ற பெரும்பாலான எல்லா அறவழிப் போராட்டங்களும் சட்ட மறுப்புப் போராட்டங்கள்தான். சட்டத்தரணிகள் தங்களுடைய சட்டரீதியிலான சௌகரிய வலையத்துக்குள் நின்றுகொண்டு போராடமுடியாது. சட்ட மறுப்பாகப் போராட சுமந்திரன் தயாரா?

ஆனால் சுமந்திரனின் போராட்டத்தை விமர்சிப்பவர்கள் அவ்வாறு பார்க்கவில்லை. "அவர் மக்களுக்காகப் போராடவில்லை. அல்லது பாதிக்கப்பட்ட குடும்பத்துக்காகப் போராடவில்லை. அல்லது படைமய நீக்கத்துக்காகப் போராடவில்லை. மாறாக கட்சிக்குள் தன் முதன்மையைப் பலப்படுத்தவும் தமிழ்த்தேசிய அரசியலில் தன்னுடைய இன்றியமையாமையை நிரூபிப்பதற்கும் அவர் இந்தப் போராட்டத்தைப் பயன்படுத்துகிறார்" என்றுதான் அவர்கள் விமர்சிக்கின்றார்கள்.

அவ்வாறு விமர்சிக்கத்தக்க விதத்தில்தான் அவருடைய நடவடிக்கைகளும் காணப்படுகின்றன. கடந்த வாரம் ஐ.நா.வுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சிவில் சமூகங்களோடு இணைந்து அந்தக் கடிதத்தைத் தயாரித்தது. அந்தக் கடிதத்தில் தமிழரசுக் கட்சி கையெழுத்துப் போடவில்லை. அந்த முடிவைப் பெரும்பாலும்

08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
17 ஓகஸ்ட் 2025




எம்.முபாறக்

# அறிந்தும் அறியாமலும்

## எப்படியிருந்தவர் இப்படியாகிவிட்டாரே!

இந்த அரசில் அமைச்சர்களும்.எம்.பி.க்களும் இலகுவில் சம்பாதிக்கமுடியாது. கிடைக்கின்ற சம்பளத்தை வைத்துத்தான் காலத்தை ஓட்ட வேண்டும். ஆனால்,இந்த அரசில் இருக்கின்ற பல முக்கியமான அமைச்சர்கள் அரசியலுக்கு வரும் முன் மாதாந்தம் லட்சக் கணக்கில் உழைத்தவர்கள்.

அவர்கள் சட்டத்தரணிகள், மருத்துவர்கள் .பேராசிரியர்கள் . இப்போது அந்த வருமானமெல்லாம் ' கட்'.அதிகமாகச் செலவழிக்க முடியாது.

சில நாட்களுக்கு முன் நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார, பணத் தேவையொன்று ஏற்பட்டு அதற்காக அவரது வாகனம் ஒன்றை விற்றுள்ளாராம். சட்டத்தரணியாக இருந்து நல்லா உழைத்த மனுஷன் அவர்.எப்பிடியிருந்தவர், இப்போது இப்படியாகிவிட்டார்.

## வாடியிருக்கும் பொன்சேகா



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகாவை அண்மையில் அவரது அலுவலகத்துக்கு அழைத்திருந்தார். ஜனாதிபதி செயலகத்தில்தான் அந்தச் சந்திப்பு நடந்தது.

பெருசா ஏதும் இருக்கும்போல, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியைத் தருவார்கள் என்று நினைத்துத் தான் பொன்சேகா போனாராம். ஆனால் அந்த விடயம் பற்றி அநுர வாயே திறக்கவில்லையாம்.

அரசியல் கொஞ்சம்.வேறு விடயம் கொஞ்சம் .அவ்வளவுதானாம் பேசினார்.
ஏமாற்றத்துடன் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு திரும்பிய பொன்சேகா, இன்னும் நம்பிக்கையுடன் காத்திருக்கிறாராம்.ஓடுமீன் ஓட உறுமீன் வரும்வரை கொக்கு வாடியிருக்கத்தானே வேண்டும் ?





## முன்னாள் புலிகளுடன் முன்னாள் அமைச்சர்

முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தங்கமுலாம் பூசிய துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த விவகாரம் தொடர்பில் 52 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் அல்லவா.

விடுதலையாகி வெளியே வந்ததும் சிறை வாழ்க்கை பற்றி அவர் ஆகா,ஓகோ என்று புகழ்ந்து வருவது நாம் அறிந்ததுதான். அதில் முக்கியமான விடயம் என்னவென்றால் அவர் முன்னாள் புலிகள் நான்கு பேருடன் அங்கு இருந்தமைதான்.

அவர்களுடன் இவர் நன்றாகப் பழகினாராம்.அவங்களும் நல்லாப் பழகினார்களாம். அந்த முன்னாள் புலிகளில் ஒருவர் 30 வருடங்களாகச் சிறையில் உள்ளாராம்.இன்னொருவர் 10 வருடமாம்.

இது போதாதென்று ஸஹ்ரானின் ஆட்கள் மூன்று பேரும் இருந்தார்களாம். எல்லோரும் தன்னை ஒரு சகோதரனாக கவனித்துக்கொண்டார்கள் என்று துமிந்த புகழாரம் சூட்டுகிறார். அத்தோடு அவர்களுக்கு வாராந்தம் தன் வீட்டில் இருந்து உணவையும் அனுப்புகிறாராம்.

## ரணிலிடம் வாங்கி கட்டிய எம்.பி.

சஜித் தரப்பு எம்.பி.க்கள் சிலர் சஜித்துடன் சேர்ந்து 'டபிள் கேம்' ஆடுவது வழமை.

அவர்கள் ரகசியமாக ரணிலைச் சந்தித்து சஜித் தரப்புக்குள் நடக்கும் விடயங்களை ரணிலிடம் எத்திவைத்துவிட்டுச் செல்வர்.

அப்படித்தான் அன்றும்.

ரணிலை போய் சந்தித்தார் ஓர் எம்.பி.

சஜித் தலைமையிலான எதிர்க்கட்சி கடும் பலவீனமாக இருப்பதாகவும் இதனால் ஏனைய கட்சிகளும் மக்களும் நாமலின் பக்கம் செல்கிறார்கள் என்றும் அவர் ரணிலிடம் கவலையாகச் சொன்னார்.

"இப்ப சொல்லி என்ன பிரயோசனம்? நீங்கள் எல்லாரும் சேர்ந்துதானே கட்சிய உடைச்சிட்டு போய் புதுக்கட்சி தொடங்கினீங்கள்?" என்று கடுமையாகப் பாய்ந்திருக்கிறார் ரணில்.

## மரண வீட்டில்....!!!

சில நாட்களுக்கு முன் பாமன்கடை பகுதியில் மரண வீடு ஒன்று. அதற்கு மஹிந்த ராஜபக்ச போயிருந்தார்.சஜித் பிரேமதாஸவும் போயிருந்தார். கூடவே சுஜீவ சேமசிங்க ,மனோ கணேசன்,திகாம்பரம் உள்ளிட்ட எம்.பி.க்களும் போயிருந்தனர்.

இறுதி மரியாதை செலுத்திவிட்டு அரசியல் கதையில் இறங்கினர் அத்தனை பேரும்.

" இப்ப எப்டி..உடம்பு நல்லமா..?"

தொடக்கி வைத்தார் சஜித் மஹிந்தவைப் பார்த்து.

" ஓம்..ஓம்..இப்ப பரவாயில்லை.சுதந்திரமா நடமாடித் திரியிறன் " என்றார் மஹிந்த.

அப்போது சுஜீவ...

" நாமலுக்கு என்ன நடந்த?..கோர்ட் வாரண்ட் கொடுத்திருக்கு.."

"அதுவா.அவர் தவணைத் திகதி அடுத்த மாதம் எண்டு மாத்தி எழுதி வச்சிருக்கார்.அது தெரியாம அன்றய நாள் மாலைதீவுக்கு கூட்டாளிட கல்யாணத்துக்கு போயிட்டார் ." என்று கவலையோடு சொன்னார் மஹிந்த. அதிலிருந்து தொடங்கி அரசைத் திட்டுகிற வரைக்கும் அரசியல் உரையாடல் விரிவடைந்துகொண்டே போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி

விசும்பின் துளி வீழின் அல்லால்...




## கடந்த மாத அமர்வு:

# காலத்தின் தேவை

## நவீன உலகில் குடிமக்களைச் செவிமடுத்தல்

வடக்கின் இளம்நீர்வாண்மையாளர்களின் கடந்தமாத அமர்வில் "நிலைமாற்றத்தை நோக்கிய குடிமக்களின் பங்குபற்றல்" எனும் தலைப்பிலான முன்னளிப்பை இவ் வட்டத்தின் தன்னார்வலரான சாரதாஞ்சலி மனோகரன் வழங்கியிருந்தார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி சார் முடிவுகளில் குடிமக்களின் பங்கேற்றலை எவ்வாறு உறுதிப்படுத்தலாம், அதன் போது ஏற்படும் தடைகள், குடிமக்களின் பங்கேற்றலின் அவசியம், சாத்தியப்பாடுகள் போன்ற விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

குடி மக்கள் செவிமடுக்கப்படுவதற்கேற்ற பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கிய வெளியின் அவசியம், குடிமக்களின் குரல்கள் முறையாக நிறுவனமயப்படுத்தப்படவேண்டியதன் அவசியம், அனைத்து வளங்களும் அணிதிரப்பட்டு நாட்டின் அபிவிருத்தி அனைவருடனும் இணைந்து வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டியதன் தேவைப்பாடு போன்றன பற்றி அம்முன்னளிப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதற்காக அவரால் முன்னளிக்கப்பட்ட குரல்வழிவலையமைப்பு (VPN: Voice-Pathway-Network) என்ற மாதிரியும் அவரால் முன்வைக்கப்பட்டு அபிப்பிராயங்கள் கோரப்பட்டன. குரல், வழி, வலையமைப்பு என மூன்று பிரதான பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட இம்மாதிரியில், குரல் எனப்படுவது குடிமக்கள் தம் குரல்களைப் பல வழிகளிலும் வெளிப்படுத்தக் கூடிய பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கிய ஒரு வெளியாகும். வழி என்பது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட குரல்கள் சரியாக மீளாய்வு செய்யப்பட்டு, வெளிப்படைத்தன்மையான முறையிலே தேர்வு செய்யப்பட்டு நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கக் கூடிய வகையிலே மாகாண மற்றும் தேசிய ரீதியிலே அங்கீகரிக்கப்படுதலைக் குறிக்கும். வலையமைப்பு என்பது நிதியாகட்டும், அறிவாகட்டும், அனுபவமாகட்டும், வாண்மையாகட்டும்.. ஆர்வமுடையவர்களிடமிருக்கும் வளங்கள் யாவும் ஓரிடத்திலே அணிதிரட்டப்பட்டு குடிமக்களின் குரல்கள் உரிய செயலாக மாற்றம் பெறுவதற்காக நாட்டின் அபிவிருத்தியை சகல தரப்பினரும் இணைந்து மேற்கொள்வதற்கு வழி வகுக்கும்.

இம்மாதிரியானது சகலதரப்பினரதும் பொறுப்புக்கூறலையும் நாட்டின் அபிவிருத்தி மீதான அவர்களின் உரித்தையும் நிலை நாட்ட முயல்வதுடன் அரசு மீது குடிமக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துவதாக அமையும் . இத்தகைய வெளிப்படைத்தன்மை மிகு முறைமைகள் பற்றிய உணர்திறனும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான உயர் நிலை முனைப்பும் உறுதியும் அமையப்பெற்றால் மாத்திரமே எதுவும் சாத்தியமாகும்.

எண்ணிமத் தொழில் நுட்ப முறைமைகள் இத்தகைய சிந்தனைகளை மேலும் வலுப்படுத்தி அவற்றின் நடைமுறைப்படுத்தலை வெகு இலகுவாக்கும். ஆதலினால் தான் மேற்குலக நாடுகளிலே ஜனநாயகப் புத்தாக்கம் என்ற புதியதோர் துறையும் எழுச்சி பெற்று வருகிறது.

# புலமையாளர் பதில்



**கேள்வி:** எமது சமூகத்தின் முன்னேற்றப் பாதையில் தற்காலத்தில் மேற்கொண்டு வரும் முயற்சிகளில் பல உடனடித் தேவைகளுக்காகவும், தூரநோக்கற்றவையாகவும், பெரும்பாலும் இயற்கை வளங்களை பேணுதலுக்கு எதிர்மாறானவையாகவும் உள்ளன. இச் சிக்கலை கையாள்வதில் உங்களது பதவி சார் பொறுப்பில் இருந்து நீங்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை கூறுவீர்களா?

*(S.வதனி, தாவடி)*

**பதில்:** அபிவிருத்தி என்னும் பார்வையில் பொதுமக்கள்,முதலீட்டாளர்கள் போன்றோர் தமது தேவைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற எண்ணப்பாடுடன் இருப்பதுடன் அதன் அவசியமும் சமூகத்தில் உணரப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களைப் பொறுத்தவரை அவை பொறுப்புக்கூற வேண்டியவையாகவும் அபிவிருத்தியை நிலைபேறானதாகவிருக்கும் வகையிலே தூரநோக்கை அடிப்படையாகக் கொண்டு அரச கொள்கைகள் மற்றும் சட்ட விதிமுறைகளிற்கு அமைய தம் கடமைகளைச் செயற்படுத்த வேண்டிய கடப்பாடு உள்ளவையாகவும் அவை காணப்படுகின்றன.

இந்த வகையில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குட்பட்ட பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிக்குள் அடுத்துவரும் 10 ஆண்டுகளின் அபிவிருத்தி வளர்ச்சிப் போக்கைக் கணித்து அந்த எதிர்வுகூறலிற்கு அமைவாக தூரநோக்கு வகுக்கப்பட்டு ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டமானது தயாரிக்கப்பட்டு அதன் வெளியீடாக பல்வேறு செயற்றிட்டங்கள் அடையாளம் காணப்படும். அதுமட்டுமன்றி வலயமாக்கல் பொறிமுறை, திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஒழுங்குமுறைகள்/விதிகள் என்பன உள்ளடங்கலான ஒரு வடிவமே நகர அபிவிருத்தித் திட்டமாகும்.

அபிவிருத்தி என்னும் பார்வையில் பௌதிகக் கட்டுமான அபிவிருத்தியானது கட்டுமானச் செயற்பாடுகள் மூலம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த அபிவிருத்தியானது இயற்கை வளங்களுடனும் இயைந்து போதல் என்ற விடயத்தில் பின்வரும் விடயங்கள் மூலம் சவாலான போக்கைக் காட்டி நிற்கின்றது.

அபிவிருத்தி செய்யப்படும் பிரதேசத்தின் உட்கட்டுமான கொள்ளளவானது அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் அதாவது பொதுவான கழிவுநீர் மற்றும் மலக்கழிவகற்றல் பொறிமுறையின்மை, நிலையான குடிநீர் வசதியின்மை, கழிவகற்றல் மற்றும் கழிவு முகாமைத்துவப் பொறிமுறையில் தளர்வு நிலை போன்றன இயற்கை வளங்களான நிலம், நீர், வளிமண்டலம் ஆகியவற்றில் தாக்கத்தைச் செலுத்தி நிற்கின்றன.

மேற்குறித்த விடயங்கள் ஒட்டுமொத்தமான ஓர் பார்வையாக இருப்பினும், தனிப்பட்ட காணிப்பரப்பில் மேற்கொள்ளப்படும் பாரிய, நடுத்தர, சிறிய அபிவிருத்தி என்ற பார்வையில் நடைபெறும் கட்டுமாண வேலைகள் பின்வரும் நிலைகளில் இயற்கை வளமான நீர் வளத்தில் பாதிப்பை ஏற்படுத்தி நிற்கின்றன.

1. காணிகள் துண்டாடப்படல்/காணி உபபிரிவிடுகை: காணிக் கொள்வனவின் போது சுகாதார விதிமுறைகளைகளைப் பேணுதல் தொடர்பில் தெளிவின்மையும், குறித்த காணியினுள்ளும், சுற்றுப்புறக் கிணறுகளில் இருந்தும், குறித்த காணியில் அமையவுள்ள மலசலகூடக்குழிக்கான தூரம் 18 மீற்றர் பேணப்படுதல் என்பது கடினமான விடயமாக இருக்கிறது. குறித்த காணியில் கிணறு வெட்டுவதாயின் அயல் மலசலக்கூடக்குழியிலிருந்து 18 மீற்றர் இடைவெளி பேணப்படல் வேண்டும். இவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில், மலசலக்கூடக் குழியானது நீர் உறிஞ்சாத் தொட்டியாக கட்டப்படுவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. இக்கட்டுமானக் கட்டமைப்பின் நம்பகத்தன்மை, தகைமை சான்றோரால் உறுதிப்படுத்தப்படுகின்றது. ஆயினும், இவை அகற்றப்படும் போது உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் உரிய நிறுவனங்கள் அதற்கான பொறிமுறைகளை வைத்திருக்காமையால் அவை சூழல் மாசுபாடு மற்றும் நீர்மாசடைதலை ஏற்படுத்துவனவான மாறும் சாத்தியப்பாடுகள் அதிகமாகும்.
2. கழிவு நீர்: காணித்துண்டின் அபிவிருத்தியின் மூலம் தமது பாவனைக்கழிவு நீரை அகற்றும் பொறிமுறை ஆதனத்தினுள் காட்டப்படுகின்ற போதும் அதன் அனுமதியின் பின்னர் மழைநீர் வாய்க்காலினுள் வெளிச் செல்ல விடல்.
3. மழைநீர் சேகரிப்பு தொட்டிகளை அமைத்தல்: நீரின் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் நிலத்தடி நீரின் சேகரிப்பை அதிகரிக்கவும் இப்பொறிமுறை அமுல்படுத்தப்படுகின்றது. எனினும் அனுமதி மற்றும் அமைவுச் சான்றிதழ் பெறப்பட்ட பின்னர் அதனை அகற்றல்/பாவனைக்கு உட்படுத்தாமை பெரும் சிக்கலாகவிருக்கிறது.
4. குழாய்க்கிணறு வெட்டுதல்: குழாய்க்கிணறு வெட்டுவதற்கு முன்னர் அதன் அளவுப்பரிமாணங்கள் தொடர்பில் நீர் வளங்கள் சபையின் சிபாரிசின் படி அதனை நடைமுறைப்படுத்தல் வேண்டும். எனினும் அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் படி முன்வைக்கப்படும் சிபாரிசிற்கு அமைய உரிய அனுமதியை வழங்கும் போது அமைவிடம் சரிபார்க்கப்படுகின்றது. எனினும், அதன் பரிணாமங்கள் மேற்பார்வை செய்யப்படுவதில்லை. அதற்கு அமைவாக நடைமுறைப்படுத்துபவர்களோ அல்லது முதலீட்டாளரோ அது தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை.
5. காணியில் கட்டடத்தின் பரப்பு (Plot Coverage): நியதிகளின் படி அனுமதி பெறல், பின்னர் அத்திறந்த நிலப்பகுதியை சிமெந்துக் கற்கள் பதித்து மூடி நீர் நிலத்துக்குள் ஊடுருவாது செய்வதால் வீதிகளில் நீர் வழிந்தோடல் அதிகரிக்கின்றது. இச் செயற்பாடானது நிலத்தடி நீர் மீள் நிரம்பாத சூழமைவை ஏற்படுத்துகின்றது.
6. திரவக் கழிவுநீர் சுத்திகரிப்பு: சுற்றுச்சூழல் அதிகார சபையில் அதிகார எல்லைப்பரப்பிற்குள் உள்ளடங்கப்பட்ட அபிவிருத்திகளுக்காக, பதிவு செய்யப்பட்ட தகைமைசார் தொழில் வல்லுநர்களால் பரிந்துரைக்கப்படும் கழிவு சுத்திகரிப்புத் தொகுதி அமைப்பிற்கு அனுமதி பெறப்பட்டு அமைவுச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. எனினும் அவை உரிய முறையில் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படாமை சூழலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

மேற்குறித்த விடயங்கள் அபிவிருத்தியின் உடனடித் தேவை கருதி வழங்கப்படும் அனுமதிகளாயினும் இயற்கை வளமான நீர்வளத்தை பாதிப்படையச் செய்வதில் சவாலான விடயங்களாக உள்ளன. இவற்றிற்குத் தீர்வாக நிலைபேறான அபிவிருத்தியை மேற்கொள்ளும் வகையில் உட்கட்டுமானக் கொள்திறனை பொதுவான ஓர் செயற்றிட்டமாக அமுல்ப்படுத்துவதோடு, சட்ட திட்டங்களை மக்கள் மத்தியில் தெளிவுபடுத்துதலும் அவசியமாகும்.

**திருமதி கவிதா ஜீவகன்**
வடமாகாண பிரதிப்பணிப்பாளர்,
நகர அபிவிருத்தி அதிகாரசபை



# இளையோர் பார்வை

## பாதுகாக்க மறந்தோமா?


மண்ணுக்குள் சேமிக்க மறந்துவிட்டோம் உனை
சோதித்துப் பார்க்க விண்கலத்தை அனுப்பிவைத்தோம்!
ஆழ்கடலில் அநாதையாகத் துரத்திவிட்டோம் உனை
வரவேற்க வானில் இரசாயனத்தை தூவிவிட்டோம்!

ஆயிரம் அடிகளைத் தோண்டியும் பார்க்க ஆசைப்பட்டோம் உனை
துளியும் தெளிவில்லாமல் வீணாக செலவுசெய்தோம்!
காலத்தின் தேவை என உணராமல் இருக்கிறோம் – நம்
சந்ததிகளை நினைக்காமல் உனைப் பாதுகாக்க மறந்துவிட்டோம்!

**அன்பரசி,** புன்னாலைக்கட்டுவன்

*எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி துளியின் 17 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடிவரும். வடமாகாணத்து நீர்வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:* **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna;** *மின்னஞ்சல்:* **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர்களை ஏமாற்றிய ஆணையாளரின் அறிக்கை!

## உள்ளக விசாரணைக்குப் பரிந்துரை!

அ.நிக்ஸன்

எதிர்வரும் செப்ரெம்பர் 4 ஆம் திகதி ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவை கூடவுள்ள நிலையில், ஆணையாளரின் முன்னோடி அறிக்கை இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையின் 12 ஆம் திகதியிட்ட பதிப்பிக்கப்பட்டிராத முன்னோடிப் பிரதி கடந்த புதன்கிழமை அவரது அலுவலகத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையை மையப்படுத்தி மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் சமர்ப்பிக்கவுள்ள பிரேரணை பரிசீலிக்கப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்படவுள்ளது. அதற்கு முன்னதாக ஆணையாளர் கையளித்துள்ள எழுத்து மூல அறிக்கையை இலங்கை அரசாங்கம் பரிசீலித்து திருத்தங்களை முன்வைக்க முடியும். இலங்கை வெளிவிவகார அமைச்சின் தகவல்களின் பிரகாரம் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மனித உரிமை விவகாரங்கள் மற்றும் நீண்டகாலமாக இலங்கை உரிய முறையில் பொறுப்புக் கூறத் தயங்கியமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளை மறுக்கவுள்ளதாகவும் இலங்கை சமர்ப்பிக்கவுள்ள திருத்தங்களை மையப்படுத்தியே மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் அமையும் எனவும் தெரியவருகின்றது.

மனிதஉரிமைகள்பேரவை தீர்மானம்நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து, ஆணையாளரின் அறிக்கையை ஏற்க முடியாது எனவும் புதிய அரசாங்கத்தின் பின்னர் மீள் நல்லிணக்கம் ஏற்பட்டுள்ளது என விளக்கம் அளிக்குமாறும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இராஜதந்திரிகளை பணித்துள்ளார் எனவும் உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

ஆணையாளரின் அறிக்கை இலங்கை அரசாங்கத்துக்குச் சாதகமாக அமைந்துள்ளது என தமிழ்த்தரப்பு கருதும் நிலையில், அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்படுள்ள மனித உரிமை மீறல் விவகாரங்களைக் கூட நிராகரிக்க வேண்டும் என அநுரகுமார திஸாநாயக ஆலோசனை வழங்கியுள்ளார் என்றால், தமிழ்தரப்பின் பலவீனம் பகிரங்கமாக வெளிப்படுகின்றது என்று பொருள்கொள்ள முடியும். அதேவேளை ஆணையாளர், அநுர அரசாங்கத்திடம் கைளித்துள்ள 16 பக்க அறிக்கையில் உள்ளடக்கம் பின்வருமாறு அமைகிறது

'2015 ஆம் ஆண்டு அப்போதைய ரணில் - மைத்திரி அரசாங்கம் அமெரிக்காவோடு இணைந்து மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றிய 301 தீர்மானம் போன்ற ஒரு நிலைமை 60 ஆம் கூட்டத்தொடரில் மீண்டும் நிறைவேற்றப்படுவதற்கான நிகழ்தகவு, பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் 2025 இல் ஏற்படக் கூடிய வாய்ப்பு உள்ளது.'

அறிக்கையின் ஆங்கில மொழிப் பிரயோகம் அவ்வாறுதான் கற்பிதம் செய்கிறது. என்.பி.பி. எனப்படும் ஜே.வி.பி. அரசாங்கத்தின் மீது அனைத்து மக்களும் நம்பிக்கை வைத்துள்ளனர் என்ற அடிப்படையில் பொறுப்புக் கூறல் விவகாரம் முழுவதையும் இலங்கையிடம் இருந்தே ஆணையாளர் எதிர்பார்க்கிறார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் குறிப்பாக வடக்கு மாகாண மக்கள் ஜே.வி.பி. எனப்படும் தேசிய மக்கள் சக்திக்கு அதிகளவு வாக்களித்து ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்தன் விளைவாக, மனித உரிமைகள் பேரவை அநுர அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்தது என்பது அறிக்கையில் தெரிகிறது. அத்துடன் ஐ.சி.சி. எனப்படும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (International Criminal Court ICC) இலங்கை இயல்பாகவே இணைவது நல்லது என்ற கோணத்திலும், இலங்கை கடந்தகால குற்றங்களில் இருந்து விடுபடுவதற்கான ஒரு வாய்ப்பாக புதிய முன்னேற்றங்கள் அமையும் என்ற வியூகத்திலும் அறிக்கையின் உள்ளடக்கம் பொதிந்துள்ளது. இலங்கை செய்ய வேண்டிய பொறுப்புக் கூறல்கள் தொடர்பாக சிறிய சிறிய விடயதானங்கள் அடங்கிய பரிந்துரைகள் இம்முறை எண்ணுக்கணக்கில் அதிகளவாக அறிக்கையின் முடிவுரையில் காணப்படுகின்றன. ஆனால், கடந்தகால அறிக்கைகள் பலவற்றில் குறைந்த எண்ணுக்கணக்கில் ஆனால் கடுமையான விடயதானங்கள் கையாளப்பட்டிருந்தமையைப் போன்று இம்முறை அனுப்பப்பட்டுள்ள அறிக்கை அமையவில்லை. மாறாக புதிய அரசாங்கத்தின் மீது ஒரு மென்போக்கையே அது வெளிப்படுத்துகின்றது. ஏற்கனவே 461 தீர்மானத்தை இலங்கை நிராகரித்திருந்தது. எந்த ஒரு பரிந்துரைகளும் இலங்கையினால் நடைமுறைப்படுத்தப்படவுமில்லை. அதன் பின்னர் தீர்மானிக்கப்பட்ட அலுவலகப் பொறிமுறை எனப்படும் ஒஸ்லாப் (OHCHR Sri Lanka Accountability Project ) திட்டத்தைக்கூட இலங்கை உரிய முறையில் செயற்படுத்தவில்லை. புதிய அரசாங்கம் என ஆணையாளர் நம்புகின்ற அநுர தலைமையிலான நிர்வாகம், பதவியேற்று ஒரு வருடமாகும் நிலையிலும், ஜெனிவாவின் எந்தவொரு பரிந்துரைகளிலும் கவனம் செலுத்தப்படவில்லை. இதன் காரண காரியமாக புதிய அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை ஆணையாளர் எந்தப் புள்ளியில் இருந்து வெளிப்படுத்துகிறார் என்ற கேள்வி எழுகிறது.

பொது நியாயாதிக்கம் எனப்படும் (Universal Jurisdiction) விசாரணை முறை கூட பயனற்றது. அதாவது போர்க்குற்றவாளி எனப்படும் நபர் வெளிநாடுகளுக்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் அங்கு வைத்து விசாரணை நடத்துவது. இத் திட்டம் சர்வதேச விசாரணை முறையும் அல்ல. ஆனால் இத் திட்டம் பற்றிய நம்பிக்கையை ஆணையாளர் பிரஸ்தாபித்துள்ளார்.

இதனாலேயே பொது நியாயாதிக்கம் என்பதை தமிழர்கள் தமது கோரிக்கையாக முன்வைக்கக்கூடாது என்ற கருத்துருவாக்கம் தமிழ்ப் பரப்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் அரசாங்க காலத்தில் நிலைமாறுகால நீதி என்று மார்தட்டி நம்பி எதுவுமே நடக்காத ஒரு பின்னணியில், எந்த அடிப்படையில் 2025 ஆம் ஆண்டிலும் புதிய அரசாங்கம் என்று ஆணையாளர் சித்திரித்து நம்பிக்கை வைக்கிறார் என்ற கேள்விகள் எழுகின்றன.

போர்க்குற்றங்கள் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் என்றும், அதற்கான சர்வதேச விசாரணைகள் தேவை எனவும் முன்னைய அறிக்கைகளில் மிகக் கடுமையாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. ஆனால், இம்முறை மனித உரிமை மீறல்கள் தொடருகின்றன என்ற கருத்தையும், பொறுப்புக் கூறலுக்கு இதுவரை இலங்கை ஒத்துழைக்காவிடினும், இனியாவது ஒத்துழைக்கவேண்டும் என்பது போலவும் பயங்கரவாத தடைச் சட்டம் இதுவரை நீக்கப்படாமை பற்றியும் ஆங்காங்கே எடுத்தியம்பும் இந்த அறிக்கை பற்பல சிறிதும் பெரிதுமான குற்றச்சாட்டுகளை மாத்திரம் அறிக்கையில் முன்வைக்கிறது. ஈழத் தமிழர்கள் மீதான இன அழிப்புக்கான சர்வதேச நீதி பற்றிய தெளிவான பரிந்துரைகள் அறிக்கையில் இல்லை. விசேடமாக, இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணையைக் கோருவதாகத் தமிழ்த் தேசியப் பேரவை கூறியிருந்தபோதும், அந்த விடயங்கள் அல்லது தமிழ்த் தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூக அமைப்புகள் இணைந்து கடிதம் அனுப்பியமை தொடர்பான எந்தவொரு பதிவும் அறிக்கையில் இல்லை.

உண்மையில் இன அழிப்புக்கான நீதியை மையப்படுத்தி அந்தக் கடிதத்தை தமிழ்த் தேசியப் பேரவை வரைந்திருக்கவில்லை. அதனாற்தான் அதை இலகுவாகத் தட்டிக்கழிக்க முடிந்துள்ளதாக சில தமிழ் அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். 2012 ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேசக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலும் நல்லிணக்கமும் என்று தொடங்கிய ஆணையாளரின் அறிக்கையிடல், தற்போது மனித உரிமை நிலைமை என்று தரம் குறைக்கப்பட்டுள் [illegible]

இம்முறை அறிக்கையின் தாக்கம் குறைவடைந்து, ஒட்டுமொத்த இலங்கை மக்களின் மனித உரிமை மீறல் விவகாரம் பற்றியதாகவும் மக்களின் ஜனநாயகப் பாதுப்பு என்ற தொனியிலும் அமைந்துள்ளது. ஆணையாளர் கடந்த ஜூன் மாதம் இலங்கைக்கு வந்தபோது யாழ். செம்மணி மனிதப் புதைகுழியையும் பார்வையிட்டிருந்தார். இதை அறிக்கையில் குறிப்பிட்டபோதும், இதை ஓர் இன அழிப்புக்கான குற்றங்களில் ஒன்றாக அவர் எடுத்தாளவில்லை. ஆணையாளர் எதிர்ப்பார்ப்பது போன்று ஐ.சி.சி. யில் இலங்கை இணைந்தாலும், 2002 ஆம் ஆண்டுக்கும் 2025 ஆண்டுக்கும் இடையான குற்றங்களை அதன் அடிப்படையில் அது விசாரிக்காமல், எதிர்காலத்தில் நிகழக்கூடிய குற்றங்களைத் தண்டிக்கும் உரிமையை வழங்குவதாகவே இலங்கை வாக்குறுதி அளிக்கும் வாய்ப்பே உள்ளது. ஆகவே, தமிழ் மக்கள் எதிர்பார்த்த இலங்கைக்கான பொறுப்புக்கூறல் இதுவா? இதுதான் சர்வதேச நீதியா ?என்ற கேள்விகள் பலமாக எழுகின்றன.

1950 களில் இருந்தே இன அழிப்பு இடம்பெற்று வருவதாக தமிழ்த் தரப்பு ஆழமாக கூறிவரும் நிலையில், கடந்தகாலக் குற்றங்களை மறப்போம் மன்னிப்போம் என நல்லிணக்க அடிப்படையில் நீக்கம் செய்து விட்டு . இலங்கை ஐ.சி.சி. யில் இணைந்த காலத்தில் இருந்து நடைபெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றி மாத்திரமே விசாரணைகள் நடத்த வேண்டும் என்ற தொனியில் ஆணையாளர் எழுதிய அறிக்கையின் ஆங்கில மொழி கற்பிதம் செய்கிறது.

ஆகவே ஈழத்தமிழர்கள் மீண்டும் ஏமாற்றப்படப் போகின்றனர் என்ற முடிவுக்கே வர வேண்டும். தேசிய இனப் பிரச்சினை விவகாரம் பத்தோடு பதினொன்றாகவே மதிப்பிடப்பட்டிருக்கிறது என்பதும் இங்கே கண்கூடு. ஆகவே, 2012 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப்பட்டு வரும் தீர்மானங்களை இந்த ஆணையாளர் வாசிக்கவில்லையா? அல்லது கவனிக்கவில்லையா? அல்லது மேற்கு ஐரோப்பிய நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப பணியாற்றுகிறாரா? இந்தக் கேள்விகளுக்கு மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் முன்வைக்கவுள்ள இலங்கை பற்றிய தீர்மானம் பதில் தருமா?

அரசு அற்ற இனங்களுக்கான நீதி என்பது புவிசார் அரசியல் தேவைகளின் அடிப்படையிலேயே அமைகின்றது என்பதற்கும், தமிழர் பிரதிநிதிகள் இறுதி நேரத்திலும் தமக்குள் முரண்பட்டுக் கொண்டிருப்பது ஆணையாளருக்கு இப்படியான அறிக்கைகளை முன்வைக்க இடமளிக்கிறது என்பதற்கும் இந்த அறிக்கை சிறந்த உதாரணம். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை மையப்படுத்திய தமிழ்த் தேசியப் பேரவை ஒழுங்கான முறையில் உயிரோட்டமாக ஒற்றை வார்த்தையில் இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணை என்று கோரியிருந்தால், ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும். குறிப்பாக தமிழரசுக் கட்சி உள்ளிட்ட அனைத்து தமிழ்த் தேசிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வடக்கு கிழக்கு ஆயர்கள் மற்றும் சைவ சமயத் தலைவர்கள் எல்லோரும் கூட்டாக இணைந்து ஈழத் தமிழர் குறித்த கூட்டு உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் கையொப்பம் இட்டு அனுப்பியிருந்தால் நிச்சயம் மாற்றம் ஏற்பட்டிருக்கும். சிங்கள அரசியல் தலைவர்கள் கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஈழத்தமிழர் விவகாரத்தில் செயற்படுவது போன்று கட்சி அரசியலுக்கு அப்பால் ஈழத்தமிழர் அரசியல் விடுதலை குறித்த விவகாரம் கையாளப்பட்டிருக்க வேண்டும். இப்போது 2015 ஆண்டு போன்ற ஒரு நிலை மீண்டும் 2025 இல் எழுந்துள்ளதால், சிங்கள அரசியல் தலைவர்களின் காய் நகர்த்தல் வெற்றியளித்துள்ளது என்றே சொல்ல வேண்டும். இந்தப் பின்னணயில் உள்ளக விசாரணை தேவையில்லை எனவும் சர்வதேச நீதி விசாரணையே அவசியம் எனவும் கூட்டாக வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கட்சிகள் ஜனநாயக வழியில் போராடவேண்டும். அதற்கு அவர்கள் தயாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனந்தி

போரின் கவிதை

24

# உருத்ரா

கண்ணீரின் துளிகள்
காத்துக்கிடக்கின்றன..
வெந்து கிடக்கும்
உயிரின் நிறத்தில்..
துருவேறிக் கிடக்கும்
உன் நினைவுகள்..
காலத்தோடு வாழ்வோம்
என்று காதலுடன்
உறவுகள் புடைசூழ
கட்டிய தாலி. வெறும் கயிறாகி..
உண்மையற்றதாகி..
போர் நெரித்த பொன்னாயிற்று!

உள்ளம் முழுவதும்
அடித்து அழுது ஓய்ந்தாயிற்று..
காதலின் வாழ்வுதனை
காலம் அப்படியே கசக்கியது.
சிறு பிள்ளைகளாக ஒன்றாக
வாழ்ந்து..பாசம் காதலாக மலர
நீயே வேண்டுமென்று
உன்னையே கணவனாக்கிய
வைராக்கியமும் பிடிவாதமும்
தோற்றுப்போயின.....
நினைத்தால் நெஞ்சடைக்கும்

யாருக்கும் எதிரியாகவில்லை..
பாசங்களை மட்டும் பகிர்ந்தோம்
ஏங்கிக் கிடந்த காலங்கள்
முழுவதும் ஏமாற்றமாகி..
எதிர்பார்க்கும் வாழ்வு
முடிந்துவிட்டாதாக..
உயிரின் உறவு..
எங்கோ தொலைந்துபோனது!

தொட்டாச் சிணுங்கியாக
தொட்டதெற்கெல்லாம் அழுது
அடம்பிடித்து.. செல்ல மனைவியாக..
சீர்பெற்றிருந்த..அதிசய காலங்கள்..
எந்த ஆரவாரமுமின்றித் தொலைந்தன..

நீ போராட்டத்துக்குப் பலமாக நின்றவன்
உனக்குப் பலமாக நம் காதல்..
இறப்பிலிருந்து எழுந்து வந்து..
இழந்த கால்களைக் கொண்டு
மீண்டும் எழுந்து நடந்து..
போர் தின்றவற்றை விட்டு
புதுவாழ்வு வாழப் புறப்பட்டவன்!

காதலின் விருப்பிற்கும்..
வாழ்வின் பிடிப்புக்கும்
மூன்று கருக்களை..
முட்டை இட்டுச் சுமந்தேன்!

நீ கொண்ட கோபம்
போர்மீது உன்காதல்
எல்லாம் அழிந்துபோனதாக
எவ்வளவு அழகாக வாழ்வை
உருவாக்கிக்கொண்டாய்.
போர் முடிந்தது
முடிந்தவை போகட்டும் என
புதிதாக வாழ்வை மணந்தோம்!

கொல்வதற்குத் தூக்கிய ஆயுதங்கள்
பாவங்களாகி விடாமல்
மண்டாடினோம்.....
முடிந்தவற்றின் தண்டனையாக..
கால்கள் இன்றி நடப்பதற்கும்
நீ... ஆயத்தமானாய்..

போரின் சுழல்விசை சுற்றிப் பிடித்த
வேகத்துள் மாண்டு போகாமல்
மீண்டு வந்தவன் நீ!
வாழவேண்டுமென்றுதானே
காலம் உன்னைக்
கௌரவப்படுத்தியது?

எல்லாம் முடிந்ததென்று
புதிதாக வாழலாம் எனக்
கைகோர்க்க
'இயமன்' வெள்ளை வாகனத்தில்
வந்து குதித்தான்..

விசாரணை என்றார்கள்..
மீட்பு என்றார்கள்..
சாட்சி என்றனர்
சரித்திரம் என்றனர்..
பிஞ்சுக் குழந்தைகளைக் காட்டி
எத்தனை முறை
கெஞ்சி முடித்தேன்!

எத்தனை கௌரவமாக
அழைத்தார்கள்..
மரியாதை தந்து மறைப்பார்கள்
என்பதை அந்த நொடியின்
அறிவு..சொல்லித் தரவில்லை.

வருவாய் வருவாய் என்று
நொடிகளாகத் தொடங்கி
நெடிய பொழுதுகளாக..
மிகநீண்டு முடிவில்லாமல்
அப்படி எங்குதான் கொண்டு
போனார்கள்?

நீல நிறச்சட்டை... வெள்ளைச்சாரம்..
உணவுக்காக நான் வைத்த
கோழிக்கறி கூட
நீ சுவைக்கவில்லை!

மனிதர்கள் வாழ நினைக்கின்ற
மானிட அவலங்களை
தேசம் முழுவதும்.. திணித்துக் கொண்டு
இந்தப் போர்.. முடித்தவரைக் கூட
விடுவதாக இல்லை
அவலங்களை மூடி முக்காடு போட்டு
வெறும் மனிதர்களாக
எம்மை அழைத்துச் செல்கிறது!

உனைப் பிரிந்த வலியோடு
சுமந்த கரு..
வலுவிழந்த கருவாக
மூளை செயலிழந்து
பெண் பிள்ளையாக
பிறவி எடுத்தது..

அப்பா வருவார்
என்னும் மந்திரத்தை
சொல்லிச் சொல்லி
என் நாட்கள் சோபை இழந்தன..

நானும் ஒருத்தியாக இப்புவியில்
வாழ்ந்து முடிக்கும்..
இப்பேரவலத்தை தந்த போரின்
வடு..
என் முகத்தில் மட்டுமல்ல
நெஞ்சம் முழுவதும்..
பட்டை பட்டையாக
கிறுக்கித் தள்ளியிருக்கிறது..

வாழ்வின் வலி
என்றும் முடியாத அப்பாவி
எச்சங்கள் தேடிக்களைத்து
தெருத்தெருவாக அலைந்து
வருவாய் என்னும்
உயரிய நம்பிக்கையை..
உடைக்கும் புதைகுழிகள்..
அந்த நீலச்சட்டையும்
வெள்ளைச் சாரமும்..
அகழ்வோரிடம்.
அகப்படக்கூடாது.....

நீ இருப்பது போலவே
எண்ணிக் கொள்கின்றேன்..
மாற நினைத்தால்..
மண்டை ஓட்டுக்குள்
புழுக்கள் ஊர்ந்து..
கண்கள் வழியாக வந்து..
காதுக்குள் புகுந்து..
தொண்டைக்குள் நின்று..
துயர நீரைப் பெய்கின்றன.

அறியப்படாத
மனநோய்களை
அடிக்கி வைத்திருக்கும்
என்வாழ்வை.. திருடிக் கொண்டு
போன.. 'வெள்ளை வாகனம்'
கண்ணில் படும்போதெல்லாம்
காற்றைக் கிழித்து
வானில் தாவி.. அதன்
மீது கல்லால் அடித்து..
அதை ஓட்டுபவன் மீது..

எச்சிலை உமிழ்ந்து..
செருப்பால் அடித்து..
அவன் தலைமயிரைப் பிடித்து உலுப்பி..
என்கோபம் அடக்க முடியாது...

இந்தப் பைத்தியத்தை
மனநிலைக்குழப்பம் என்று
என் மகள் 'வைத்தியம்'
செய்கிறாள்
எனக்கான மருந்தை
காலம் எங்கோ கொண்டு போய்
ஒளித்து வைத்திருக்கிறது
அதைக்கண்ணில் காட்டும்வரை
என் ஆவேசம் அடங்காது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சியின்ர துவசம்

பாலாஜினி

'சந்தனப் பொட்டொண்டோட ஆச்சி படத்தில சிரிச்சுக் கொண்டிருக்கிறா. அவாவின்ர படத்துக்கு முன்னால வாழையிலை யில அரிசியைப்பரவி அதுக்குமேல கும்பத்தை வைச்சு வாழைப்பழச் சீப்பொண்டும், சாம்பிராணிக் குச்சியொன்றையும் கொளுத்தியிருந்தார் மருமகன். ஆச்சியின்ர பெறாமகள் துவசத்துக்குச் சமைப்பதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந் தாள்.

முதல் நாளே வீடு முழுவதும் கழுவிச் சுத்தம் செய்து சாணத்தினால் அடுப்பு மெழுகி, பெரியறை மேல்தட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் புதிய பாத்திரங்களை எல்லாம் எடுத்து கழுவி வைத்துவிட்டாள் பெறாமகள். அவளுக்கு ஆச்சி மீது அவ்வளவு நம்பிக்கை.17 வருடங்கள் கடந்த பின்னும் ஆச்சி தன்னைத் தேடி வருவாள் என்பது ஆச்சியின் பெறா மகளுக்கு அசைக்க முடியாத எண்ணம்.



மூன்று கல் அடுப்பில் உலைவைத்து நன்றாக விளாசி எரியக்கூடிய ஊமல்,தடிகளை வைத்து எரியவைத் திருந்தார் மருமகன். ஆச்சியின் மூத்தபோர்த்தி தாய்க்கு சமைப்பதில் உதவிபுரிந்துகொண்டிருந்தாள். ஆச்சியின் இரண்டு வயதே நிரம்பியிருந்த கொள்ளுப்பேர்த்தி அடுக்களைக்குள் அங்குமிங்குமாக ஓடித்திரிந்து கொண்டிருந்தாள். 'பிள்ளை விரதத்துக்கு சமைக்கிற மல்லோ. கொஞ்சம் வெளியில போய் விளையாடம்மா' எண்டு சொல்லி அவளை வெளியே அனுப்ப முயன்று கொண்டிருந்தார் தாத்தா.

உள் அடுப்பில் மரவள்ளிக்கிழங்கும் பூசணிக்காயும் கறியாகிக் கொண்டிருந்தன.சரியாகப் பன்னிரண்டு மணிக்கு சமையலை முடித்து படைத்துவிடவேண்டும் என்ற உத்வேகத்தில் கடகட என சமையல் நடந்து கொண்டிருந்தது. சமையல் தொடங்கிப் பாதி நேரத்தில் ஆச்சியின் இரண்டாவது பேர்த்தியும் தனது கணவன் மற்றும் மகளுடன் வந்து சேர்ந்திருந்தாள். இப்போது சமையலுக்கு அவளும் உதவி செய்யத் தொடங்கியி ருந்தாள்.

ஆச்சிக்குப் பிள்ளைகள் இல்லை. அவள் திருமணம் செய்யவுமில்லை. ஆனால் ஆச்சியின் தங்கைக்கு ஐந்து பெண் பிள்ளைகள். அதிலே ஒரு பிள்ளையை தன் பிள்ளையாக வளர்த்ததனால் இறுதிக்காலம் வரை அவளுடனே தங்கிவிட்டார் ஆச்சி. அந்தப் பெறாமகள் தான் இப்போது ஆச்சிக்கு படைப்பதற்கு தன் கண வன்,பிள்ளை குட்டிகளுடன் அடுக்குப் பண்ணிக் கொண்டிருந்தாள்.

வீட்டுக்கு வந்த தங்கைக்கு உடன் கிண்டி அவித்த பனங்கிழங்கினை சாப்பிடுமாறு கொண்டுவந்து தமக்கை கொடுப்பதைக் கண்ட தாய்( ஆச்சியின் மகள்) 'சமைக் கிற இடத்தில உதுகள் ஒண்டையும் சாப்பிடக் கூடாது. வெளில கொண்டுபோய் வைச்சு சாப்பிட வேணும்' எண்டு உரத்த குரலில் கூறினாள். ஆச்சிக்கு அதீத உரிமையுள்ளவள் தானே என்ற எண்ணம் எப்போதுமே அவளுக்குள் இருந்து கொண்டிருக்கும். அதை அவள் பெருமை யாகவே கருதுவதுண்டு.

சஞ்சீவி
சிறுகதை

ஆச்சிக்குக் கொள்ளிவைத்த அவரின் மருமகன் படையலுக்குத் தேவையான சரீர வேலைகளை எல்லாம் செய்து விட்டு பேர்த்திகளுடன் விளையாடிக்கொண்டி ருந்தார்.கொள்ளி வைத்தவர் விரதம் பேணவேண்டும் என்ற நியதிக்கமைய அவர் காலையில் இருந்து எதையும் சாப்பிடவேயில்லை. வயிறு இலேசாக பசிக்கத் தொடங்கியிருந்ததால் அவ்வப்போது அடுக்களைப் பக்கமும் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தார்.

சோறு தயாராகி விட்டிருந்தது. பயற்றங்காய்,பருப்பு,மர வள்ளிக்கிழங்குப் பூசணி மசியல்,உருளைக்கிழங்குக் குழம்பு,பாகற்காய் கறி என்பன தயாராகி விட்டிருந்தன. அப்பளமும் மிளகாயும் அடுப்பிலே பொரிவதற்கு தயாராகிக் கொண்டிருந்தன.

ஆச்சி வந்து சாப்பிடுவதற்குத் தயாராக நிற்பதைப் போன்ற எண்ணம் மகளுக்கு. அவசரப்பட்டுக்கொண்டி ருந்தாள்.நேரமும் மதியம் 12 இனை நெருங்கிக்கொண் டிருந்தது.மிக சுத்தமாக கழுவப்பட்ட வாழை இலையில் ஆச்சிக்கான சாப்பாடு தயாராகிக் கொண்டிருந்தது.

ஆச்சி அவர்களின் குடும்பத்திற்கு கிடைத்த ஒரு கொடுப்பினை. இறுதி வரைக்கும் மகள் மருமகன் இருபேர்த்தி கள் என்று இருந்தாலும் சொந்த ஊரைப் பார்க்கவும் சென்று வருபவள். எப்போ தும் நூல் சீலையொன்றுடனே காணக் கிடைக்கும் அவளுக்கு சும்மா இருப்ப தென்பது முடியாத காரியம். எப்போதும் எதையாவது செய்து கொண்டேயிருப் பாள். பெட்டிக்குள் புதிய சேலைகள் நிறைய இருந்தாலும் ஒருபோதும் அவற்றை கட்டிக்கொள்ளமாட்டாள். கட்டிய ஒன்றிரண்டு சேலைகளை மட்டுமே கட்டுவது வழக்கம்.மெலிதான உடற்கட்டுடன் இருந்ததனாலோ அல்லது அந்தக்காலச் சாப்பாடோ என்னவோ சுறுசுறுப்பு அதிகமாக இருந்தது. அதிகா லையில் எழும்பி வாய் கொப்பளித்து முகம் கழுவி திருநீறு பூசாமல் தேநீர்கூட அருந்தமாட்டாள். தீவிர முருகபக்தையும் கூட. கந்தசஷ்டி,விசாகம் போன்ற நாள்களில் முருகன் அவர் மீது தோன்றி கலை ஆடும் வழக்கமும் இருந்தது. மகளோ மருமகளோ பேர்த்திகளுக்கு அடிக்க வந்தால் இடையில் நுழைந்து முருகன் போல அபயக்கரம் நீட்டுவதும் அவள்தான்.

ஆச்சியின் இளைய பேர்த்திக்கு இப்போது நினைத்தாலும் அது இன்றைக்கு நடந்ததைப் போல இருக்கிறது. கடைசி நேரத்தில் ஆச்சி ஏலாது படுக்கையிலே இருக்கையிலே 'ஆச்சி உன்ர சின்னப் பேர்த்தி ஒரே குழப்படி அடிக்கட்டுமோ ?' என்று அவளைக் காட்டித் தமக்கை கேட்டபோது கதைக்கேலாமல் இருந்த நிலையிலும் நாக்கைக் கடித்து கைகளால் வேண்டாம் என்று சைகை காட்டிய ஆச்சியின் நினைவு அவளுக்குள் வந்து நின்று சாப்பிட்டுக் கொண்டிருந்த அவள் கண்களைக் குளமாக்கியிருந்தது.

படைத்துமுடித்து பிள்ளைகள், மருமகன்மார், பேர்த்தி கள் என அனைவருக்குப் சாப்பாடு போட்டுக்கொடுத்து விட்டு சாப்பிடத் தொடங்கியிருந்தார்கள் ஆச்சியின் மகளும் மருமகனும். 'ஆச்சி வந்தவாவோ சாப்பிட்டிருப் பாவோ' எண்ட அங்கலாய்ப்பில் சாப்பிட்டுக்கொண்டி ருந்தாள் மகள். ஆச்சியின்ர படையல் சோறைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த மருமகனுக்கு மட்டும் ஒரு விசயம் நன்றாகவே புரிந்தது. அவர் மனதுக்குள் இப்படிச் சொல்லிக்கொண்டார்.

'ஆச்சி வந்திட்டுத் தான் போயிருக்கிறா'

---

# அழிவில்லா உயிரின் கனிமம் இளைஞர்கள்!

உறங்கும் உலகில் விழிக்கும் கண்கள்,
உறுதிகொண்ட உற்சாகம் நிரம்பிய மனங்கள்,
அழிக்காத கனவுகளைச் சுமந்தவர்கள்
அவர்கள்தான் இளைஞர்கள்!

அடர்ந்த இருளில் ஒளியாகப் பறக்கும்,
அமைதிக்கு வில்லாக அமைந்து நிற்கும்,
அழகிய நாளை சிந்திக்க வைக்கும்
அழிவில்லா உயிரின் கனிமம் இளைஞர்கள்!

தொழில் தொடங்கும் துணிவும்,
தூண்டிவிடும் தீர்வும்,
நாடு கேட்கும் தேவைக்கும்
நம்பிக்கையான பதில்கள் இவர்கள்!

சட்டம் மீறிய சத்தங்கள் அல்ல,
சரியான பாதை தேடும் சிந்தனைகள்!
சமத்துவம் கேட்கும் குரல்களாய்
சமூகத்தை மாற்றும் செயல்கள்!

திறமையைச் சிதறாமல் தெய்வமாக்குவோம்,
தனிப்பட்ட கனவுகளை சமூகக் கனவுகளாக்குவோம்,



நடராசா கோபிராம்,
உளவியல் சிறப்புக்கலை மாணவன், யாழ். பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளார்ப்புதினைம்

பாகம் 3

இராகவன்

எனக்குச் “சத்யசாயிபாபா” எண்டொராள் இருக்கிறார் எண்டதே ராதா மாமா வீட்டை போனாப் போலதான் தெரியும். ராதா மாமாவின்ர மனிசிக்காறி பவாக்காவும் அவவின்ர சகோதரிமாரும் சத்ய சாயிபாபாவின்ர தீவிர பக்தைகள். அவையின்ர வீட்டுச் சாமியறையில அபயகரங்காட்டிக்கொண்டு காவியுடுப்பில சத்யசாயிபாபா நிக்கிற ஒரு பெரியபடமிருந்தது. எனக்கு அந்தப் படத்தைப் பாக்க வேடிக்கையாகவும் பயமாகவுமிருக்கும். ஒவ்வொரு வியாழக்கிழமையும் அவையின்ர வீட்டில பஜனை நடக்கும். அந்தப் பஜனையில அவையள் சேர்ந்து பாடுற ஒரு பாட்டு இப்பவும் எனக்குத் தண்ணிபட்டபாடு. அந்தப் பாட்டு இதுதான்,

“மச்ச ரூபனே! எங்கள் சாயி! சத்தியு சாயி! கூர்ம ரூபனே! எங்கள் சாயி! சத்திய சாயி! வராக ரூபனே! எங்கள் சாயி சத்திய சாயி! வாமன ரூபனே! எங்கள் சாயி! சத்திய சாயி! நரசிம்ம ரூபனே! எங்கள் சாயி! சத்திய சாயி! பரசுராம ரூபனே! எங்கள் சாயி! சத்திய சாயி! ராம ரூபனே! எங்கள் சாயி! சத்திய சாயி! பலராம ரூபனே! எங்கள் சாயி! சத்திய சாயி! கிருஷ்ண ரூபனே! எங்கள் சாயி! சத்திய சாயி! கல்கிரூபனே! எங்கள் சாயி! சத்திய சாயி! “

அவையள் சேர்ந்து பாடுறதை நான் வேடிக்கை பாப்பன். எல்லாம் முடிஞ்சாப்போல கௌபி (அப்ப கடலை குடுக்கிற நடைமுறை வரேல்ல) மோதகம், வடை எல்லாங் கிடைக்கும். எனக்கு அதான் முக்கியம். ஆனால் அதில எனக்கு இன்னொரு கவலையான விசயமு மிருந்தது. வியாழக்கிழமை பின்னேரம் அங்கை பஜனை நடக்கிறதால ரீவி போடமாட்டினம். அதால கௌபி, மோதகம், வடையைத் திண்டிட்டுப் பாலைக் குடிச்சிட்டு வரவேண்டியது தான். இப்பிடிப்பட்ட பஜனையளும் பூசை புனஸ்காரங்களும் நடக்கிற வீட்டில ராதா மாமா ஒவ்வொரு நாளும் பொழுதும் இறைச்சியும் குடியுமாயிருக்கிறது அவரின்ரை மாமன்காரன் செனிற்றரி சண்முகம்பிள்ளைக்குக் கொஞ்சமும் பிடிக்கேல்லை. அதால இரண்டு பேருக்குமிடையில கொழுவல் வந்திட்டுது. ராதா மாமா என்ன செய்தாரெண்டால் அந்த வீட்டோடை சேத்துத் தனக்கும் மனிசிக்காறிக்கும் அளவாய்ப் புதுமொடல்ல ஒரு கொண்டிசனான வீட்டைக் கட்டினார்.

41

அதோட புதுசா மலசலகூடமும் கொஞ்சம் விசாலமாக் கட்டி ஒரு சிங்கிள் கேற்றும் போட்டார். அதோட அவர், தான் கட்டின வீட்டுக்கு லெவல்சீற்றெல்லாம் அடிச்சு சீலிங்பேனும் பூட்டி வேறலெவலுக்கு மாத்தினார். அதுக்குப் பிறகு மாமன்காறன் கட்டின பாத்றூம், கிணறு ஒண்டையும் பாவிக்காமல் குளிக்கிறதுக்கெண்டு ஒறைவரை அறேஞ் பண்ணிப் பருத்தித்துறைக் கடற்கரைக்கும் அத்துளு அம்மன் கோவிலுக்கும் குளிக்கப் போறதை வழக்கமாக்கிக்கொண்டார். ஆனால் மனிசிக்காறி அவவின்ர தகப்பன் சகோதரங்களோட புழங்கிறதை அவர் மறிக்கேல்ல.

இப்பிடியெல்லாம் காலங் கழிஞ்சுகொண்டிருக்கேக்குள்ளை ராதா மாமா ஓவறாக் குடிச்சதால நோய்வாய்ப் பட்டார். ஆளுக்கு ஈரல் போகிட்டுது. தொடக்கத்திலேயே டொக்ரர்மார் இனிக்குடிக்கவே கூடாது எண்டு திரும்பத் திரும்பச் சொல்லியும் அந்தாளுக்கு செவிடன் காதில ஊதின சங்கு மாதிரிப்போகிட்டுது. 1981 இல் ராதா மாமா காலமாகிட்டார்.

(தொடரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறுவர் கைவண்ணம்




**மு.மதுஷி**
தரம்- 9E
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை





**K.அஜிவுா**
தரம்- 6
யா/சாவகச்சேரி
இந்துக் கல்லூரி




**இ.திரிசன்,**
தரம் 2 B
யா/சாவகச்சேரி இந்து
ஆரம்பப் பாடசாலை



**ம.களடில்யன்**
தரம்- 2
உடுவில் மகளிர்
கல்லூரி



**தீ.நயனிகா**
தரம்- 4C
யா/சாவகச்சேரி
இந்து ஆரம்பப்
பாடசாலை.



**ம. அத்திகா**
தரம்- 3D
யாழ்.இந்து ஆரம்பப்
பாடசாலை.




**மாணவர்களே!**

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!


உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



# சுமந்திரனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## வழிகாட்டுவோம்




சுமந்திரனே எடுத்திருப்பதாகக் கருதப்படுகிறது.அவர் சொன்னதைச் சிவஞானம் திரும்பிச் சொல்கிறார் என்றுதான் எல்லாரும் நம்புகிறார்கள். எனவே இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு இணைந்து ஒரு கூட்டுக் கடிதத்தை அனுப்புவதற்கு சுமந்திரன் தயாராக இருக்கவில்லை.

அந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளோடு இணைந்து முடிவெடுத்திருந்திருந்தால் இன்றைக்கு கடையடைப்பை அல்லது அதுபோன்ற ஏதோ ஒரு போராட்டத்தை எல்லோருமாகச் சேர்ந்து தரமாகச் செய்திருக்கலாம்.அதற்குத் தமிழரசுக் கட்சியின் 'ஈகோ' இடம் கொடுக்கவில்லை.

ஆனால் அதற்கு சுமந்திரன் ஒவ்வொரு நாளும் காணொலியில் வந்து விளக்கம் கொடுக்கிறார். அவர் தரும் விளக்கங்களில் முக்கியமானது, 'நாங்களே பெரிய கட்சி நாங்களே முதன்மைக் கட்சி எனவே நீங்கள் கடிதத்தை எழுதிவிட்டு எங்களை அதில் கையெழுத்துப் போடுமாறு கேட்க முடியாது' என்ற பொருள்பட அமைந்துள்ள விளக்கந்தான். அதில் ஒரு பகுதி உண்மை. அவர்கள்தான் பெரிய கட்சி;அவர்கள்தான் முதன்மைக் கட்சி. அதில் யாருக்கும் சந்தேகமில்லை. ஆனால் இங்கே கேள்வி என்னவென்றால், கடந்த 16 ஆண்டுகளாக அவர்களே முதன்மைக் கட்சியாகவும் முடிவெடுக்கும் கட்சியாகவும் இருந்து தமிழ் மக்களுக்கு செய்த நன்மைகள் என்ன? கடந்த 16 ஆண்டுகாலத் தமிழரசியலில் ஏற்பட்ட தேக்கங்கள்,தோல்விகள், பின்னடைவுகள் போன்ற எல்லாவற்றிற்கும் அவர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும்.

அதுமட்டுமல்ல அனைத்துலக அளவில் குறிப்பாக ஐ.நா.வில் தமிழ் மக்களின் விவகாரம் மேலும் நீர்த்துப்போகக்கூடிய ஆபத்துத் தெரிகிறது .அதற்கும் தமிழரசுக் கட்சிதான் பொறுப்பேற்க வேண்டும். 2015இலிருந்து ஐ.நா.வின் நிலைமாறுகால நீதிக்கான தீர்மானத்தை நோக்கி தமிழரசியலைச் செலுத்தியது முக்கியமாக சுமந்திரனும் சம்மந்தருந்தான். அது ஒரு தோல்வியுற்ற பரிசோதனை என்று பின்னர் சுமந்திரன் சொன்னார். அது அவர்களுடைய தனிப்பட்ட தோல்வி அல்ல. இனத்தின் தோல்வி. இப்பொழுதும் ஐ.நா.வை கையாளும் விடயத்தில் தமிழரசுக் கட்சியின் அணுகுமுறை வெளிப்படையாயானதாக, ஐக்கியமானதாக இல்லை.இதில் வரக்கூடிய தோல்விக்கு யார் பொறுப்புக் கூறுவது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org